6. தமிழ்நாடு தொழில் துறை வெடிபொருள் நிறுவனத்துக்கு (TEL) வர்த்தக முன்பணத்தை நிறுவனம் வழங்கியது.

31.03.2021ல் வசூலிக்கப்படாமல் இருந்த ரூ.2.63 கோடி தொகையானது, 2021-22ம் ஆண்டில் முழுமையாக பெறப்பட்டது. TEL நிறுவனம் சார்பில் வட்டியை தள்ளுபடி செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதால், 2017-18 முதல் 2021-22 நிதியாண்டுகள் வரையான காலத்தில் சேர்ந்த ரூ.2.28 கோடி வட்டித் தொகையானது, கணக்கில் சேர்க்கப்படவில்லை. இதன் காரணமாக, மற்ற வருவாய் குறைத்து மதிப்பிடப்பட்டதற்கு இணையாக குறுகிய கால கடன்கள் மற்றும் முன்பணமும் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக குறிப்பு எண்.33 (VI)ஐ பார்க்கவும்.

**முக்கிய தணிக்கை விவகாரங்கள்**

முக்கிய தணிக்கை விவகாரங்கள் என்பது, எங்களது தொழில்முறை முடிவுகளின்படி, நடப்புக் காலத்துக்கான நிதிநிலை அறிக்கைகள் மீதான எங்களது தணிக்கைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இந்த விவகாரங்களுக்கு நிதிநிலை அறிக்கை மீதான எங்களது தணிக்கையில் ஒட்டுமொத்த அளவில் தீர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, எங்களது கருத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, இந்த விவகாரங்கள் தொடர்பாக தனித்தனியான கருத்துக்களை நாங்கள் தெரிவிக்கவில்லை.

தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படையில் இடம்பெற்றுள்ள விவகாரங்களைத் தவிர மற்ற விவகாரங்கள் தொடர்பாக, தணிக்கை அறிக்கையில் வேறு எந்தவொரு முக்கிய தணிக்கை விவகாரங்களையும் எடுத்துரைக்க வேண்டியதில்லை என்று நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

**வலியுறுத்தப்படும் விவகாரங்கள்**

1. கீழே குறிப்பிட்டபடி, பணம் பெறுவது மற்றும் செலுத்துவதில் நீண்ட காலமாக (3 ஆண்டுகளுக்கும் மேலாக) கீழ்க்காணும் அளவுக்கு நிலுவை இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.480.28 லட்சம் வரவுகளை தள்ளுபடி செய்த பிறகு, ரூ.710.96 லட்சம் கடன்களை திருப்பி எழுதவும் (குறிப்புகள் எண்.33 (மி) (5)ஐ பார்க்கவும்:

| | |
|---|---|
| செலுத்த வேண்டியது | ரூ.951.78 லட்சம் |
| பெற வேண்டிய தொகை | ரூ.1676.09 லட்சம் |

மேலே நிலுவைகளில் சேர்க்கப்பட்டுள்ள சில பொருட்கள் 2012 முதல் ERPக்கு இடம்பெயர்ந்த ஆண்டாகத் தொடர்கின்றன.

2. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் தொகையை தாமதமாக செலுத்தியதால், ரூ.145 லட்சம் செலுத்த வேண்டியிருப்பதாக சிங்கரேனி காலியரீஸ் நிறுவனம் கூறியிருக்கும் விவகாரம் தீர்க்கப்படாமல் உள்ளது. இதனை கடனாக நிறுவனம் ஏற்றுக்கொள்ளவில்லை. (கணக்குப்பதிவின் ஓர் அங்கமான குறிப்புகளில் உள்ள குறிப்பு எண்.33 IV (A) (g)-யைப் பார்க்கவும்)

3 31.03.2023ன்படி, அம்மா சிமெண்ட்ஸ் தொடர்பான கணக்குப்பதிவு புத்தகத்தில் பலதரப்பட்ட கடன் வழங்கியவர்களின் கணக்கில் (ஜிஎல்:61502) நிலுவைத் தொகையாக ரூ.396.15 லட்சம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில், விநியோக பதிவேடு "ஏ"வில் பற்று என ரூ.15.87 லட்சம் மட்டுமே நிலுவையில் உள்ளது. இது நிலுவை சரி செய்யப்படாமல் இருப்பதை வெளிப்படுத்துகிறது.

4. அ) அரியலூர் பிரிவில் "மற்ற வைப்புத் தொகைகள்" என்ற அம்சத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள, கீழே குறிப்பிட்ட தரப்பிடமிருந்து எந்தவொரு உறுதியும் பெறப்படவில்லை:

(ரூ. லட்சத்தில்)

| வ.எண் | பெயர் | கணக்கில் உள்ளபடி தொகை 31.03.2022 |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு மின்சார வாரியம் (4 எல்டி யூனிட்கள்) | 14.33 |
| 2 | தெற்கு ரயில்வே | 12.62 |
| 3 | புவியியல் மற்றும் சுரங்க இயக்குநர் | 130.00 |
| 4 | மேட்டூர் அனல் மின் நிலையம் | 68.15 |

ஆ) தேர்வு செய்யப்பட்ட தரப்பிடமிருந்து வர்த்தகத்துக்கு பெறப்பட்டவை, உத்தரவாத வைப்புத் தொகை, பங்குகள், பெறப்பட்ட தொகைகள், வர்த்தக கடன் ஆகியவற்றுக்கான உறுதி பெறப்பட்டுள்ளன. கணக்குப் பதிவை மேற்கொண்டதற்கான குறிப்பு எண்.33 (X)-ஐ பார்க்கவும்.

இந்த விவகாரங்களில் (1 முதல் 4 வரை) எங்களது கருத்துக்களில் எந்தவித மாற்றமும் செய்யப் படவில்லை.

**மற்ற விவகாரங்கள் நிதிநிலை அறிக்கைகள் மற்றும் தணிக்கையாளரின் அறிக்கை தவிர மற்ற தகவல்கள்**

மற்ற தகவல்களை தயாரிக்கும் பொறுப்பு நிறுவனத்தின் வாரிய இயக்குநர்களுக்கு உண்டு. வாரிய அறிக்கையின் இணைப்புகள், வர்த்தக பொறுப்பு அறிக்கை உள்ளிட்டவை மற்ற தகவல்கள் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. எனினும், இதில், நிதிநிலை அறிக்கைகள், நமது தணிக்கையாளரின் அறிக்கை ஆகியவை இடம்பெறுவதில்லை.

நிதிநிலை அறிக்கை தொடர்பான எங்களது கருத்துக்களில் மற்ற தகவல்கள் குறித்த அம்சங்கள் இடம்பெறுவதில்லை. இதில், எந்த வடிவிலான உறுதியான முடிவையும் நாங்கள் வெளிப் படுத்துவதில்லை.

நிதிநிலை அறிக்கைகள் குறித்த எங்களது தணிக்கையின்போது, பிற தகவல்களை படிப்பது எங்களது பொறுப்பு. அப்போது, மற்ற தகவல்கள், தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகளுடன் பொருந்தாமல் உள்ளதா அல்லது நமது தணிக்கையின்போது தாங்கள் கருதிய தகவல்படி உள்ளதா அல்லது ஆவண அடிப்படையில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிப்போம்.

நாங்கள் செய்த பணிகளின் அடிப்படையில், இந்த பிற தகவல்கள் ஆவண அடிப்படையில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு வந்தால், உண்மையை நாங்கள் வெளிப்படுத்துவது அவசியம். இந்த விவகாரத்தில் வேறு எந்த அறிக்கையும் அளிக்க மாட்டோம்

**தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகளுக்காக நிர்வாகத்தின் பொறுப்பு**

தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகளை தயாரிக்கும் விவகாரத்தில் சட்டத்தின் பிரிவு 134 (5)ல் குறிப் பிட்ட விவகாரங்களை பின்பற்ற வேண்டியது நிறுவனத்தின் வாரிய இயக்குநர்களின் பொறுப்பு. இது, சட்டத்தின் கீழ்பிரிவு 133 மற்றும் அதில் உள்ள மற்ற விதிகளின்படி, கணக்குப்பதிவுக்கான தர நிலைகள் உள்ளிட்ட இந்தியாவில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்குப்பதிவு விதிகளைப் பின் பற்றி, நிறுவனத்தின் நிதி நிலை, ரொக்க வரத்து உள்ளிட்ட தகவல்கள் குறித்து உண்மையாகவும், வெளிப்படையாகவும் கருத்து தெரிவிக்க வேண்டும்.

இந்தப் பொறுப்புகளில், நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்காக சட்டத்தில் உள்ள வழிமுறை களைப் பின்பற்றி போதிய கணக்குப்பதிவு ஆவணங்களை பராமரிப்பதும் அடங்கும். அதேபோல, முறைகேடுகள் மற்றும் பிற தவறுகளைக் கண்டறிவது மற்றும் தடுப்பது; உரிய கணக்குப்பதிவு கொள்கைகளை தேர்வுசெய்வது மற்றும் பின்பற்றுவது; ஏற்றுக்கொள்ளக் கூடிய மற்றும் சரியான வழியில் முடிவுகளை மேற்கொள்வது ஆகியவற்றை

பின்பற்ற வேண்டும். அதோடு, கணக்குப்பதிவு ஆவணங்களை துல்லியமாகவும், முழுமையாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும், நிதிநிலை அறிக்கை தயாரிப்பு மற்றும் வெளியிடுவதற்காகவும் போதிய உள்முக நிதி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வடிவமைத்து, அமல்படுத்தி, பேணிக் காக்க வேண்டும். இவை, உண்மையான மற்றும் வெளிப்படையான கண்ணோட்டத்திலும், மோசடி அல்லது தவறுகளால் ஆவணங்கள் தவறாக குறிப்பிடப்படாமலும் இருக்க வேண்டும்.

**நிதிநிலை அறிக்கைகளை தணிக்கை செய்வதில் தணிக்கையாளரின் பொறுப்புகள்**

ஒட்டுமொத்த நிதிநிலை அறிக்கையிலும் தவறு அல்லது முறைகேடு காரணமாக தகவல்கள் தவறாக குறிப்பிடப்படாமல் உள்ளதா? என்பதற்கான ஏற்றுக் கொள்ளக் கூடிய உறுதியைப் பெற்று, எங்களது கருத்துக்களுடன் தணிக்கையாளரின் அறிக்கையை அளிப்பதே எங்களது நோக்கம். ஏற்றுக் கொள்ளக் கூடிய உத்தரவாதம் என்பது உயர்மட்ட உத்தரவாதம். எனினும், தணிக்கை தரநிலையுடன் மேற்கொள்ளப்படும் தணிக்கையின்போது, தகவல்கள் தவறாக இருந்தால், அது கண்டுபிடிக்கப்படும் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. முறைகேடு அல்லது தவறுகள் காரணமாக தவறான அறிக்கைகள் இருக்கலாம். இதனை தனியாகவோ அல்லது ஒட்டுமொத்தமாகவோ பார்க்கும்போது, இந்த நிதிநிலை அறிக்கைகள் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பொருளாதார முடிவுகளில் தாக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு.

தணிக்கைக்கான தரநிலையின்படி மேற்கொள்ளப்படும் தணிக்கையின் ஓர் அங்கமாக, எங்களது தொழில்முறை முடிவுகளை பின்பற்றுகிறோம். மேலும், தணிக்கை முழுவதுமே தொழில் முறையில் சந்தேகத்துடன் பார்ப்போம். இதில் மேலும்

முறைகேடு அல்லது தவறுகள் காரணமாக நிதிநிலை அறிக்கைகள் தவறாக கொடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து கண்டறிதல் மற்றும் மதிப்பீடு செய்தல், இந்த வாய்ப்புகளைக் கண்டறியும் வகையில் தணிக்கை செய்தல், எங்களது கருத்துக்களை தெரிவிப்பதற்கு அடிப்படையான போதுமான மற்றும் உரிய அளவில் தணிக்கை ஆதாரங்களைப் பெறுதல் ஆகியவற்றை மேற்கொள்ள உள்ளோம். தவறுகளால் ஏற்படும் தவறான தகவல் ஆவணங்களைவிட, மோசடியால் ஏற்படும் தவறான தகவல்களை கண்டுபிடிக்க முடியாமல் போவதற்கு வாய்ப்புகள் அதிகம். இணைந்து செயல்படுதல், மோசடி, திட்டமிட்டு கைவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்முக கட்டுப்பாட்டை மீறி செயல்படுதல் ஆகிய முறைகேடுகள் நடைபெற வாய்ப்பு உண்டு.

- சூழ்நிலைக்கு ஏற்றபடி, தணிக்கை வழிமுறைகளை வடிவமைப்பதற்காக உள்முக கட்டுப்பாட்டு முறைகளை புரிந்துகொள்தல். சட்டத்தின் பிரிவு 143 (3) (i)ன்படி, நிறுவனம் போதுமான முறையில் உள்முக நிதி கட்டுப்பாட்டு முறையை வைத்துள்ளதா, அவை சரியாக செயல்படுகிறதா என்பது குறித்தும் எங்களது கருத்துக்களை தெரிவிக்கும் பொறுப்பு எங்களுக்கு உண்டு.

- நிறுவனம் பயன்படுத்தும் கணக்குப்பதிவுக்கான கொள்கைகள் உரிய முறையில் உள்ளதா, கணக்குப் பதிவு மதிப்பீடு மற்றும் அதுதொடர்பாக நிறுவனம் வெளியிடும் தகவல்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- எதிர்காலத்தின் தேவையை பூர்த்திசெய்வதை அடிப்படையாகக் கொண்டு, கணக்குப்பதிவு முறையை நிர்வாகம் பயன்படுத்தியதன் உறுதித்தன்மையை கண்டறிதல். கிடைக்கப்பட்ட தணிக்கை ஆதாரங்களின் அடிப்படையில், எதிர்காலத் தேவையை நிறைவேற்றும் வகையில், நிறுவனத்தின் திறன் உள்ளதா என்பதில் சந்தேகம் ஏற்படும் வகையில் ஆவணங்களில் நிலையற்ற தன்மை உள்ளதா என்பதை கண்டறிதல். ஆவணங்களில் நிலையற்ற தன்மை இருப்பதாக நாம் இறுதி முடிவுக்கு வந்தால், நிதிநிலை அறிக்கையில் அதுதொடர்பாக வெளியிடப்பட்ட தகவல்கள் குறித்து தணிக்கை அறிக்கையில் எடுத்துரைக்க வேண்டியது அவசியம் அல்லது அந்தத் தகவல்கள் போதுமானதாக இல்லாவிட்டால், எங்களது கருத்துக்களை மாற்றிக் கொள்வோம். நாங்கள் தணிக்கை அறிக்கை வெளியிடும் தேதி வரை கிடைக்கும் ஆதாரங்களை வைத்து மேற்கொள்ளப்படும்

தணிக்கை அடிப்படையிலேயே எங்களது முடிவுகள் இருக்கும். எனினும், நிறுவனம் தொடர்ந்து செயல்பட முடியாமல் போவதற்கு எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழல்கள், காரணமாக இருக்கலாம்.

- வெளியிட்டுள்ள தகவல்கள் உள்ளிட்ட நிதிநிலை அறிக்கையின் ஒட்டுமொத்த தயாரிப்பு, அதன் அமைப்பு மற்றும் அதில் உள்ள தகவல்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல். மேலும், பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகள் வெளிப்படையான முறையில் நிதிநிலை அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

எங்களது தணிக்கையின்போது, உள்முக கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் உள்ள ஏதாவது குறைபாடுகள் கண்டறியப்படுவது உள்ளிட்ட குறிப்பிடத்தக்க தணிக்கை முடிவுகள், எதிர்கால திட்டம் மற்றும் தணிக்கை காலம் உள்ளிட்டவை தொடர்பான தகவல்களை நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களிடம் தெரிவிப்போம்.

சுதந்திரமாக செயல்படுதல் தொடர்பான உரிய நெறிமுறை தேவைகளை பின்பற்றுவது குறித்த அறிக்கையை நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்களிடம் வழங்குவோம். எங்களது சுதந்திரமான செயல்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக பின்பற்றப்படுபவை என்று கருதப்படும் மற்ற விவகாரங்கள் மற்றும் அனைத்து தொடர்புகள் குறித்தும் எடுத்துரைப்போம்.

நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்களிடம் தகவல்களை தெரிவிப்பது என்பது, அந்தத் தகவல்கள், நடப்பு காலத்தில் நிதிநிலை அறிக்கைகளை தணிக்கை செய்வதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த தணிக்கை விவகாரங்கள் என்ற முடிவுக்கு வருகிறோம். இந்த விவகாரங்கள் குறித்து பொதுவெளியில் வெளியிடக் கூடாது என்று சட்டம் அல்லது ஒழுங்குமுறையில் தடை இல்லாத வரையில், இந்தத் தகவல்களை எங்களது தணிக்கை அறிக்கையில் தெரிவிப்போம். மிகவும் அரிதான நேரங்களில், இந்தத் தகவல்களை வெளியிட்டால், பொதுநலன் பாதிக்கப்படும் என்று கருதினால், அதுபோன்ற தகவல்களை எங்களது அறிக்கையில் இடம்பெறக் கூடாது என்று நாங்கள் முடிவுசெய்வோம்.

**மற்ற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் குறித்த அறிக்கை**

சட்டத்தின் பிரிவு 143 (11)ன்படி, மத்திய அரசு வெளியிட்ட நிறுவனங்கள் (தணிக்கை அறிக்கை) உத்தரவு, 2021 (உத்தரவு)ல் இடம்பெற்றபடி, அந்த உத்தரவின் 3 மற்றும் 4வது பத்திகளில் குறிப்பிடப்பட்ட தகவல்களை பிற்சேர்க்கை இயில் நாங்கள் சேர்த்துள்ளோம்.

**சட்டத்தின் 143 (3) பிரிவில் இடம்பெற்றுள்ளபடி, கீழ்க்காணும் தகவல்களை நாங்கள் அளிக்கிறோம்:**

அ. எங்களது தணிக்கைக்காக தேவைப்படும் தகவல்கள் மற்றும் விளக்கங்கள் அனைத்தையும் எங்களது புலமை மற்றும் நம்பிக்கைகளின் அடிப்படையில் நாங்கள் கேட்டுப் பெற்றுள்ளோம்.

ஆ. இந்த கணக்குப் புத்தகங்களை நாங்கள் ஆய்வுசெய்தவரை, சட்டத்தில் குறிப்பிட்டபடி, கணக்குப்பதிவு புத்தகங்களை நிறுவனம் கையாண்டுள்ளது என்று நாங்கள் கருதுகிறோம்.

இ. இந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள நிதிநிலை அறிக்கை, வரவு செலவு அறிக்கை, பண வரத்து குறித்த அறிக்கை ஆகியவை கணக்குப்பதிவு புத்தகத்தில் இடம்பெற்ற தகவல்கள் அடிப்படையில் உள்ளன

ஈ. மேற்கண்ட தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், சட்டத்தின் பிரிவு 133ல் குறிப்பிட்டபடி, இந்திய கணக்குப்பதிவுக்கான தரநிலையுடன் இடம்பெற்றுள்ளன என்பதே எங்களது கருத்து.

உ. இயக்குநர்கள் வாரியத்தில் உள்ள தகவல்களின்படி, மார்ச் 31, 2023ல் நிறுவனத்தின் இயக்குநர்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களின் அடிப்படையில், சட்டத்தின் பிரிவு 164 (2)ன் கீழ் இயக்குநராக நியமிக்கப்பட்ட யாரும், மார்ச் 31, 2023ன்படி தகுதிநீக்கம் செய்யப்படவில்லை.

ஊ. எங்களுக்கு கிடைத்த தகவல்கள் மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட விளக்கத்தின்படி, இந்த ஆண்டு காலத்தில், இயக்குநர்களுக்கான ஊதியத்தை சட்டத்தின் பிரிவு 197ல் இடம்பெற்றுள்ள வழிமுறைகளின்படி நிறுவனம் வழங்கியுள்ளது என்று நாங்கள் கருதுகிறோம்.

எ. நிறுவனத்தின் நிதிநிலை விவரங்களை வெளியிடுவதற்கான உள்முக நிதி கட்டுப்பாட்டு முறைகளின் துல்லியம் மற்றும் அதன் செயல்பாட்டுத் திறன் ஆகியவை குறித்து, நாங்கள் தனியாக அளித்துள்ள பிற்சேர்க்கை ஈயைப் பார்க்கவும்.

ஏ. நிறுவனங்கள் (தணிக்கை மற்றும் தணிக்கையாளர்கள்) விதிகள், 2014ன் விதி 11ன்படி தணிக்கையாளர் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பிற விவகாரங்களைப் பொருத்தவரை, எங்களுக்கு கிடைத்த தகவல்கள் மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட விளக்கத்தின் அடிப்படையில் கருத்துக்களைத் தெரிவிக்கிறோம்.

1. நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் நிலுவையில் உள்ள வழக்கு விவரங்களை நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதற்கு நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்பு எண்.33 (மிகூஷி) (ஙி) (3)ஐ பார்க்கவும்.

2. சொத்து அடிப்படையிலான நீண்டகால ஒப்பந்தம் எதனையும் நிறுவனம் மேற்கொள்ளவில்லை. இதன் காரணமாக, இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறித்த ஆவணங்கள் எதுவும் இல்லை.

3. முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு நிறுவனம் பரிவர்த்தனை செய்ய வேண்டிய தொகை எதுவும் இல்லை.

சட்டத்தின் பிரிவு 143(5)யின் கீழ் தேவைப்படும் "இணைப்பு சி"ல் வழிகாட்டுதல்கள் பற்றிய எங்கள் அறிக்கையையும், "இணைப்பு ஞி"ல் இந்திய தலைமை கணக்குக் தணிக்கையாளரால் வழங்கப்பட்ட கூடுதல் துணை வழிகாட்டுதல்கள் பற்றிய எங்கள் அறிக்கையும் தருகிறோம்.

எம்.தாமஸ் அண்ட் நிறுவனத்துக்காக

பட்டய கணக்காளர்
நிறுவன பதிவு எண். 004408S

(A.ரொசாரியோ)
பார்ட்னர்
உறுப்பினர் எண்.021230
UDIN: 23021230BGXCZR7287

இடம் : சென்னை – 600004
தேதி : 30–10–2023

## "இணைப்பு A" சுதந்திரமான தணிக்கையாளர் அறிக்கைக்கு

(எங்களின் சம தேதி அறிக்கையின் பிற சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் பற்றிய அறிக்கை பிரிவின் கீழ் உள்ள பத்தி 1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டது)

(i)

a) அ) நிறுவனம் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் நிலைமை உட்பட அளவின் விவரங்கள் மற்றும் வெளிப்படையான விவரங்களின் சரியான பதிவுகளை ERPயில் பராமரித்து வந்துள்ளது,

ஆ) தொட்டுணர முடியாத சொத்துக்கள் குறித்த முழு விவரங்களுடன் கூடிய உரிய ஆவணங்களை நிறுவனம் பராமரித்து வந்துள்ளது.

b) எங்களுக்கு விளக்கியபடி, சொத்து, ஆலை மற்றும் உபகரணங்களின் நேரடி சரிபார்ப்பு, நிறுவனத்தின் அளவு மற்றும் அதன் சொத்துக்களின் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட நிர்வாக குழுவால் மேற்கொள்ளப்பட்டது. எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கத்தின்படி, நேரடி ரீதியாகக் கிடைக்கும் சொத்துக்களுக்கும் கணக்குப் புத்தகங்களின் படியும் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை.

c) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கத்தின்படி, சொத்துக்கள், ஆலைகள் மற்றும் உபகரணங்கள் என்று வெளிப்படுத்தப்பட்ட அசையாச் சொத்துக்கள் தொடர்பாக எங்களால் ஆய்வு செய்யப்பட்ட பதிவுகளின்படி, இணைப்பு A1யில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர, நிதிநிலை அறிக்கைகள் நிறுவனத்தின் பெயரில் உள்ளன.

d) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கத்தின்படியும், நாங்கள் ஆய்வுசெய்த கணக்குப் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களின்படியும், நிறுவனம் தனது சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் அல்லது தொட்டுணர முடியாத சொத்துக்களை குறிப்பிட்ட ஆண்டில் மறுமதிப்பீடு செய்யவில்லை.

e) தொட்டுணர முடியாத எங்களுக்கு நிர்வாகம் அளித்த தகவல்கள் மற்றும் விளக்கத்தின்படி, பினாமி சொத்துக்களை வைத்திருப்பது தொடர்பாக, பினாமி பரிமாற்றங்கள் (தடை) சட்டம், 1988 மற்றும் விதிகளின் கீழ், 31.03.2023ன் படி, நிறுவனத்துக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவும் இல்லை. நிலுவையிலும் இல்லை.

(ii)

a) எங்களுக்கு விளக்கப்பட்ட மற்றும் நாங்கள் ஆய்வு செய்த பதிவுகளின் அடிப்படையில், எங்கள் கருத்துப்படி, சரக்குகளின் நேரடி சரிபார்ப்பு நியாயமான இடைவெளியில் இல்லாவிட்டாலும், நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட குழுவால் 2022–23ல் மேற்கொள்ளப்பட்டது. மேலும், எங்களுக்கு விளக்கப்பட்ட தரவுகள் மற்றும் நாங்கள் ஆய்வு செய்த பதிவுகளின் அடிப்படையில், ஒவ்வொரு பிரிவிலும் நேரடி ஆய்வின்போது, கணக்குப் புத்தகத்தில் 10% அல்லது அதற்கும் மேலான அளவுக்கு சரக்குகளில் வேறுபாடுகள் இல்லை என்பது தெரியவந்துள்ளது. அம்மா சிமெண்ட்ஸ் தொடர்பாக, பல்வேறு குடோன்களில் இருக்கும் இருப்புகளை டான்செம் அதிகாரிகள் நேரடியாக சரிபார்க்கவில்லை. மேலும், சில குடோன்களில் கையிருப்பு இருப்பதற்கான உத்தரவாதமும் பெறப்படவில்லை.

b) இருப்பு அடிப்படையில் நிறுவனத்துக்கு பணி மூலதன கடன் (ரொக்க கடன் கணக்கில்) வழங்கப் பட்டுள்ளது. எனினும், இதனை நிறுவனம் பயன்படுத்தவில்லை. வங்கியில் நிறுவனம் தாக்கல் செய்த இருப்பு குறித்த அறிக்கைகள், கணக்குப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

(iii)

a) தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் எக்ஸ்ப்ளோசிவ் லிமிடெட் (TEL)க்கு நிறுவனம் கடன் அளித்துள்ளது. 31.03.2021 ன்கீழ் நிலுவையில் இருந்த ரூ.2.63 கோடி தொகையானது, 2021–22ம் ஆண்டில் முழுமையாக திரும்பப் பெறப்பட்டுள்ளது. எனினும், டெல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கடனுக்கான குறிப்புகளின் அடிப்படையில், 2015–16, 2016–17 நிதியாண்டுகளுக்கு ரூ.0.66 கோடி வட்டி பெறப்பட்டுள்ளது. எனினும், கடனுக்கான

வட்டியை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று டெல் நிறுவனம் கேட்டுக் கொண்டதால், 2017–18 நிதியாண்டு முதல் 2021–22 வரையான காலத்துக்கான வட்டியாக ரூ.2.28 கோடித் தொகை, கணக்குப் புத்தகத்தில் சேர்க்கப்படவில்லை. (TEL) நிறுவனம் வட்டி தொகையை தள்ளுபடி செய்ய கோரியது. குறிப்பு எண்.33 (VI) பார்க்கவும்.

b) மேலும் நாங்கள் மேற்கொண்ட தணிக்கை வழிமுறைகள் அடிப்படையிலும், எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கத்தின்படியும், ஆண்டின் வர்த்தக சமயங்களில் உபகரணங்களை வாங்குவதற்காக தொழிலாளர்களின் முன்பணம் மற்றும் முன்பண செலுத்துதலை நிறுவனம் பயன் படுத்தியுள்ளது. இது இந்தப் பிரிவின் கீழ் சேர்ப்பதற்கு கருத்தில் கொள்ளப்படவில்லை.

(iv) எங்களின் கருத்துப் படியும், எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கத்தின்படியும், சட்டத்தின் 185 மற்றும் 186வது பிரிவுகளின் வழிமுறை மூலம், கடன், முதலீடு, உத்தரவாதம் மற்றும் பங்கு எதுவும் பெறப்படவில்லை.

(v) நிறுவனத்தின் சட்டம் 73 முதல் 76 வரையிலான பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள் (வைப்புத் தொகைகளை ஏற்றுக்கொள்வது) விதிகள், 2014 (திருத்தப்பட்டவை) ஆகியவற்றின் அர்த்தத்தில் எந்தவொரு வைப்புத்தொகையும் நிறுவனம் ஏற்கவில்லை. இதன்படி, உத்தரவு அளிக்கப்பட்டதின்படி பிரிவு 3(ஸ்)யின் விதிகள் நிறுவனத்திற்கு பொருந்தாது.

(vi) செலவுப் பதிவேடுகளின் பராமரிப்பு, மத்திய அரசின் நிறுவனங்கள் சட்டம், 2013யின் 148(1) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், துணைப்பிரிவு (1) யின் கீழ் மத்தியஅரசால் பரிந்துரைக்கப்பட்ட, திருத்தப்பட்ட, நிறுவனங்கள் (செலவு ஆவணங்கள் மற்றும் தணிக்கை) விதிகள், 2014யின் படி நிறுவனம் பராமரிக்கும் செலவுப் பதிவுகளை நாங்கள் விரிவாக மதிப்பாய்வு செய்துள்ளோம். சிமெண்ட் மற்றும் மற்ற பொருட்கள் தயாரிப்பு விவகாரத்தில் செலவுக் கணக்கு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனினும், இதனை நாங்கள் விரிவாக ஆய்வுசெய்யவில்லை.

(vii) a) நிறுவனத்தின் ஆவணங்களை நாங்கள் ஆய்வு செய்ததன் அடிப்படையில், சரக்கு மற்றும் சேவை வரி, சேமநல நிதி, தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம், வருமானவரி, சுங்கவரி, மேல் வரி மற்றும் மற்ற செலுத்த வேண்டிய வரிகள் அனைத்தும் உரிய முறையில் வழக்கமாக செலுத்தப்பட்டுள்ளன. எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் எங்களது ஆய்வின்படி, மேற்கொண்ட தொகைகளில் மார்ச் 31, 2023ன்படி செலுத்த வேண்டிய காலத்திலிருந்து 6 மாதங்களுக்குப் பிறகும் நிலுவை எதுவும் கிடையாது.

b) எங்களது கருத்து மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, சரக்கு மற்றும் சேவை வரி, சேமநல நிதி, தொழிலாளர் ஈட்டுறுதி கழகம், வருமானவரி, விற்பனை வரி, சுங்கத் தீர்வை, கலால் வரி, மதிப்பு கூடுதல் வரி, மேல் வரி மற்றும் பிற செலுத்த வேண்டிய தொகைகள் எதுவும், நிலுவையில் உள்ள கணக்குகளின்கீழ் வேறுபட்ட அமைப்புகளிடம் செலுத்தப்படவில்லை. (இணைப்பு கி2 பார்க்கவும்)

(viii) எங்களுக்கு நிர்வாகம் அளித்த தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, இந்த ஆண்டுகாலத்தில் முன்பு பதிவுசெய்யப்படாத வருவாய், வருமானவரி சட்டம், 1961 (1961ன் 43)ன்படி வரி மதிப்பீட்டுக்காக வருமானமாக தெரிவித்து பரிவர்த்தனை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(ix)
a) எங்களது கருத்துப்படியும், எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கத்தின்படியும், கணக்குப் புத்தகங்களை நாங்கள் ஆய்வுசெய்ததன் அடிப்படையிலும், தமிழ்நாடு அரசிடம் பெற்ற குறிப்பிட்ட கடன்கள், அதற்கான வட்டி ஆகியவற்றை நிறுவனம் செலுத்தவில்லை. தேவையான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கடன் பத்திரங்கள் உள்ளிட்ட கடனாக பெறப்பட்ட விவரங்கள் | கடனை வழங்கியவர் | செலுத்த வேண்டிய காலத்தில் செலுத்தாத தொகை | கடன் தொகை அல்லது வட்டித் தொகையா | தாமதமான அல்லது செலுத்தப்படாத நாட்கள் எண்ணிக்கை | குறிப்புகள், ஏதாவது இருந்தால் |
|---|---|---|---|---|---|
| வட்டியில்லா கடன் (ரூ.43.607 கோடி) | தமிழ்நாடு அரசு | ரூ..1.09 கோடி<br>ரூ.1.09 கோடி | அசல் | 145 நாட்கள்<br>55 நாட்கள் | எதுவும் இல்லை |
| முன்பணம் என்ற அடிப்படையில் (ரூ.300 கோடி) | தமிழ்நாடு அரசு | ரூ.31.51 கோடி<br>ரூ.3.95 கோடி | வட்டி மற்றும் அபராதம் வட்டி | 1829 நாட்கள் | அபராத வட்டியை தள்ளுபடி செய்யுமாறு அரசுக்கு நிறுவனம் கடிதம் எழுதியது |
| முன்பணம் என்ற அடிப்படையில் (ரூ.20 கோடி) | தமிழ்நாடு அரசு | ரூ.5.74 கோடி | வட்டி | 182 நாட்கள் | அபராத வட்டியை தள்ளுபடி செய்யுமாறு அரசுக்கு நிறுவனம் கடிதம் எழுதியது |

b) எங்களது கருத்து மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, எந்தவொரு வங்கியோ அல்லது நிதி நிறுவனமோ அல்லது மற்ற கடன் வழங்குபவர்களோ, நிறுவனத்தை திட்டமிட்டு கடனை திருப்பிச் செலுத்தாதவர் என்று அறிவிக்கவில்லை.

c) எங்களது கருத்து மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள் மற்றும் நாங்கள் ஆய்வுசெய்த ஆவணங்களின் அடிப்படையில், குறிப்பிட்ட கால கடன் என்ற அடிப்படையில் பெறப்பட்ட தொகை, அந்த நோக்கத்துக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.

d) எங்களுக்கு கிடைத்த தகவல்கள் மற்றும் விளக்கங்களின் அடிப்படையிலும், நாங்கள் பின்பற்றிய வழிமுறை களின்படியும், நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கையை ஒட்டுமொத்தமாக ஆய்வுசெய்ததன் அடிப்படையிலும், குறுகிய கால அடிப்படையில் பெறப்பட்ட எந்தவொரு நிதியும், நிறுவனத்தின் நீண்டகால திட்டங்களுக்கு நிறுவனத்தால் பயன்படுத்தப்படவில்லை என்பதை தெரிவிக்கிறோம்.

e) நிறுவனத்துக்கு எந்தவொரு துணை நிறுவனம், கூட்டு நிறுவனம் மற்றும் இணைந்து செயல்படுபவை எதுவும் கிடையாது. எனவே, பிரிவு எண்கள் (ணி) மற்றும் (தி) ஆகியவை பொருந்தாது.

(x)

a) தொடக்க பங்கு வெளியீடு அல்லது பிந்தைய பங்கு வெளியீடு (கடன் பத்திரங்கள் உள்ளிட்ட) முறையில் முதலீடு எதையும் நிறுவனம் பெறவில்லை. எனவே, உத்தரவின் பிரிவு (10)(ஏ)வில் உள்ள 3வது பத்தி இதற்கு பொருந்தாது.

b) எங்களது கருத்துப்படியும், எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படியும், எங்களது தணிக்கை வழிமுறைகளின் அடிப்படையிலும், தேர்வுசெய்யப்பட்ட தனியார் அடிப்படையில், விருப்பப்படி மாற்றிக் கொள்ளக் கூடிய கடன் பத்திரங்களை நிறுவனம் வெளியிடவில்லை. மேலும், இந்த ஆண்டில் எந்தவொரு முன்னுரிமை அடிப்படையில் பங்குகள் அல்லது முழுவதும் அல்லது பகுதியளவுக்கு மாற்றிக் கொள்ளக் கூடிய கடன் பத்திரங்களை நிறுவனம் ஒதுக்கீடு செய்யவில்லை. எனவே, உத்தரவின் பிரிவு (10)(பி)ன் 3வது பத்தி, நிறுவனத்துக்கு பொருந்தாது.

(xi)

a) நிதிநிலை அறிக்கைகள் குறித்து உண்மையான மற்றும் வெளிப்படையான கருத்துக்களை தெரிவிக்கும் நோக்கில் தணிக்கை வழிமுறைகளை பின்பற்றியதிலும், எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கத்தின்படியும், நிறுவனம் எந்தவொரு மோசடியையும் செய்யவில்லை அல்லது இந்த ஆண்டு காலத்தில் மோசடி நடைபெற்றதாக கண்டறியப்படவில்லை அல்லது தெரிவிக்கப்படவில்லை.

b) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கத்தின்படி, நிறுவனங்கள் (தணிக்கை மற்றும் தணிக்கையாளர்கள்) விதிகள் 2014ன் விதி 13ன்கீழ், படிவம் ஏடிடி4ல் சட்டத்தின் 143வது பிரிவின் துணைப் பிரிவின் 12ன்கீழ், மத்திய அரசிடம் எந்தவொரு அறிக்கையையும் நாங்களோ அல்லது வேறு எந்த தணிக்கை யாளரோ அளிக்கவில்லை.

c) நிர்வாகம் எங்களுக்கு அளித்த தகவல்களின்படி, குறிப்பிட்ட ஆண்டில் நிறுவனத்தில் முறைகேடு நடைபெற்றதாக ஊழியர்கள் உள்ளிட்ட யாரும் புகார்களைத் தெரிவிக்கவில்லை.

(xii) எங்களின் கருத்துப்படி, நிறுவனம் நிதி நிறுவனம் அல்ல. அதன்படி, ஆணையின் பத்தி 3யின் (a, b & c) உட்பிரிவு (xii) விதிகள் நிறுவனத்திற்கு பொருந்தாது.

(xiii) எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கத்தின்படி எங்களின் கருத்து, அனைத்து பரிவர்த்தனைகளும் பொருந்தக்கூடிய இடங்களில் மற்றும் நிதிநிலை அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விவரங்கள் கணக்கியல் தரநிலைகளின் தேவைக் கேற்றபடி, நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவுகள் 177 மற்றும் 188 தொடர்புடையவைக்கு உடன்படுவையாக உள்ளன.

(xiv) a) எங்களது கருத்து மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கத்தின்படி, நிறுவனத்துக்கு அதன் அளவு மற்றும் பணிகளின் அடிப்படையில், உள்முக தணிக்கை அமைப்பு செயல்பட்டு வருகிறது.

b) குறிப்பிட்ட காலத்தின் உள்முக தணிக்கையாளரின் அறிக்கையை பரிசீலித்து தணிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

(xv) எங்களது கருத்து மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கத்தின்படி, சட்டத்தின் 192 வது பிரிவில் குறிப்பிட்டபடி, இயக்குநர்கள் அல்லது அவர்களுடன் தொடர்புடைய நபர்களுடன் எந்தவொரு ரொக்கமற்ற பரிவர்த்தனைகளை நிறுவனம் மேற்கொள்ளவில்லை. இதன்மூலம், உத்தரவின் பிரிவு (15)ன் 3வது பத்தி நிறுவனத்துக்கு பொருந்தாது.

(xvi)

a) எங்களது கருத்து மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934ன் பிரிவு 45ஐஏவின்படி, நிறுவனம் பதிவுசெய்ய வேண்டியதில்லை. இதேபோல, உத்தரவு 2016ன் பிரிவு (16)ன் பத்தி 3ன் வழிமுறைகள், நிறுவனத்துக்கு பொருந்தாது.

b) எங்களது கருத்துக்கள் மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்கள் மற்றும் எங்களது தணிக்கை வழிமுறைகளின்படி, இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934ன்படி, வங்கியல்லாத நிதி அல்லது வீட்டுவசதி நிதி நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொள்ளவில்லை.

c) எங்களது கருத்துக்கள் மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, இந்திய ரிசர்வ் வங்கி அளித்த ஒழுங்குமுறையில் வரையறுத்தபடி, முதலீட்டு நிறுவனமாக (CIC) நிறுவனம் செயல்படவில்லை. எனவே, பிரிவு (16) (C&D) நிறுவனத்திற்கு பொருந்தாது.

(xvii) எங்களது கருத்து மற்றும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்கங்களின்படி, இந்த நிதியாண்டில் மற்றும் முந்தைய நிதியாண்டில் எந்தவொரு பண இழப்பையும் நிறுவனம் பெறவில்லை.

(xviii) இந்த ஆண்டு காலத்தில் முக்கியமான தணிக்கையாளர்கள் யாரும் பணியிலிருந்து விலகவில்லை. எனவே, உத்தரவின் பிரிவு (18)ன் 3வது பத்தியில் உள்ள வழிமுறைகள், இந்த நிறுவனத்துக்கு பொருந்தாது.

(xix) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல்களை நாங்கள் ஆய்வு செய்த பதிவுகள் மற்றும் நிதி விகிதங்கள் அடிப்படையில் நிதி சொத்துக்கள் மற்றும் கடன்களை செலுத்துவதற்கான தேதி மற்றும் முதுமை அடையும் காலம், நிதி அறிக்கைகளில் இடம்பெற்றுள்ள மற்ற தகவல்கள், வாரிய இயக்குநர்கள் மற்றும் நிர்வாகத் திட்டங்கள் குறித்து எங்களுக்குத் தெரிந்தவை மற்றும் யூகத்துக்கு ஆதரவு அளிக்கும் வகையில் நாங்கள் நம்புவதற்கான ஆதாரங்களை ஆய்வுசெய்ததில், எங்களது கவனத்துக்கு எதுவும் வரவில்லை. இதன்மூலம், தணிக்கை அறிக்கை அளிக்கப்படும் நாளில் எந்தவொரு நிலையில்லா நிலையும் ஏற்படலாம் மற்றும் நிதிநிலை அறிக்கை அளிக்கப்படும் நாளில் கடனை திருப்பி செலுத்த முடியாமல் இருக்கலாம் மற்றும் இவை நிதிநிலை அறிக்கை நாளிலிருந்து ஓராண்டுக்குள் வரலாம் என்று நம்புகிறோம். எனினும், நிறுவனத்தின் எதிர்காலத் திறனுக்கான உத்தரவாதமாக இது இல்லை. தணிக்கை அறிக்கை நாள் வரையான உண்மைத்தகவல்களின் அடிப்படையில் நாங்கள் தகவல்களை அளிக்கிறோம் என்று நாங்கள் குறிப்பிடுகிறோம். நிறுவனத்தின் அனைத்து கடன்களையும், நிதிநிலை அறிக்கை அளித்த நாளிலிருந்து ஓராண்டுக்குள் மற்றும் செலுத்த வேண்டிய காலத்துக்குள் நிறுவனத்தால் செலுத்த முடியும் என்பதற்கு எந்தவொரு உத்தரவாதத்தை அல்லது உறுதிப்பாட்டை நாங்கள் அளிக்கவில்லை.

(xx) எங்களின் கருத்து மற்றும் எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கத்தின் படி, தமிழ்நாடு மாநில பேரிடர் அபாயக் குறைப்பு முகமையிடம் 26 செப்டம்பர் 2023 அன்று டெபாசிட் செய்யப்பட்ட, நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 135ன் துணைப் பிரிவு 5ன் கீழ் செலவழிக்கப்படாத தொகை ரூ.22.26 லட்சமாகும்.

(xxi) நிறுவனத்துக்கு எந்தவொரு துணை நிறுவனம்/கட்டுப்பாட்டில் உள்ளவை/இணை நிறுவனங்கள் என எதுவும் கிடையாது. எனவே, இந்தப் பிரிவு இந்த நிறுவனத்திற்கு பொருந்தாது.

எம்.தாமஸ் அண்ட் நிறுவனத்துக்காக

பட்டய கணக்காளர்
நிறுவன பதிவு எண். 004408S

(A.ரொசாரியோ)
பார்ட்னர்
உறுப்பினர் எண்.021230
UDIN: 23021230BGXCZR7287

இடம் : சென்னை – 600004

தேதி : 30–10–2023

## இணைப்பு A-1 லிருந்து சிகிஸிளி அறிக்கை 2022-2023

### நிறுவனத்தின் பெயரில் இல்லாத அசையா சொத்துக்கள்

| சொத்துக்களின் விவரம். | மொத்த மதிப்பு (ரூபாயில்) | எந்தப் பெயரில் உள்ளது. | உரிமையாளர், இயக்குநர் அல்லது அவர்களின் உறவினர் அல்லது தொழிலாளரா? | வைத்திருந்த காலம் - தேவையான இடத்தில் அளவை குறிப்பிடவும், | நிறுவனத்தின்* பெயரில் இல்லாததற்கான காரணம் *பிரச்சினைக்குரிய இடங்களுக்கு குறியீடு இடம் பெற்றிருக்கும். |
|---|---|---|---|---|---|
| விருத்தாசலம் நகர வட்டம் 17 (56-1கி, 57, 58, 59-1) 7 ஹெக்டேர் 96 ஏக்கர் மற்றும் 50 சதுர மீட்டர் அரசு புறம்போக்கு நிலம் - ஆலை வளாகம். | தகவல் இல்லை | புறம்போக்கு நிலம் | உரிமையாளர் - தமிழ்நாடு அரசு | 1989 | இந்த நிலம் அரசு புறம் போக்கு நிலமாக இருப்பதால், நிலத்தையொட்டி உள்ள கட்டிடத்தை பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால், நிறுவனத்தின் பெயரில் வைத்துக் கொள்ள முடியாது. |
| விருத்தாச்சலம் ஆலையையொட்டிய சாலை | தகவல் இல்லை | புறம்போக்கு நிலம் | உரிமையாளர் - தமிழ்நாடு அரசு | 1989 | இது புறம்போகு நிலமாக இருப்பதால், நில உரிமை பத்திரத்தை நிறுவனத்தின் பெயரில் வைத்திருக்க முடியவில்லை. |
| கண்டிக்குப்பம் கிராமம், விருத்தாசலம் நகராட்சி 160/1 பகுதி மற்றும் 161/1 பகுதி 0.5365 சதுர மீட்டர் விரிவாக்கம் செய்யப்பட்டது. இது வறண்ட நிலம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. | தகவல் இல்லை | தமிழ்நாடு அரசு தொழில் பயிற்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம். | உரிமையாளர் - தமிழ்நாடு அரசு | 1989 | தமிழ்நாடு செராமிக்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து ஆவண ஆதாரங்கள் தேவைப்படுவதால், டான்செம் நிறுவனத்தின் பெயரில் பட்டாவை மாற்ற முடியாது. |
| அரியலூர் மாவட்டம் மற்றும் தாலுக்கா புதுப்பாளையம் கிராமம் சர்.எண்.223, 224, 228/5, 232 மற்றும் 233/16/ மொத்த பரப்பளவு 1.265 ஹெக்டேர். | 9,16,662/- | தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம் (ஒதிக்கி வைக்கப்பட்ட நிலம்) | உரிமையாளர் - தமிழ்நாடு அரசு | 2022 | இந்த நிலம் அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| அரியலூர் மாவட்டம் மற்றும் தாலுக்கா புதுப்பாளையம் கிராமம் சர்.எண்.205, 206, மொத்த பரப்பளவு 0.695 ஹெக்டேர். | 6,27,537/- | தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம் (ஒதிக்கி வைக்கப்பட்ட நிலம்) | உரிமையாளர் - தமிழ்நாடு அரசு | 2022 | இந்த நிலம் அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| அரியலூர் மாவட்டம் மற்றும் தாலுக்கா புதுப்பாளையம் கிராமம் சர்.எண்.152/15, 153/6, 156/3, மொத்த பரப்பளவு 0.995 ஹெக்டேர். | 9,13,545/- | தமிழ்நாடு சிமென்ட்ஸ் நிறுவனம் (ஒதிக்கி வைக்கப்பட்ட நிலம்) | உரிமையாளர் - தமிழ்நாடு அரசு | 2022 | இந்த நிலம் அரசு புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. |

## இணைப்பு A-2 லிருந்து சிகிஸிளி அறிக்கை 2022-2023
## சட்டரீதியான நிலுவைத் தொகைகள்

| வ. எண். | சட்டம் | மதிப்பீட்டு வருடம் | விவாதத்துக்குரிய வரி கோரிக்கை (ரூ. லட்சங்களில்) | மேல்முறையீடு எங்கு நிலுவையில் உள்ளது |
|---|---|---|---|---|
| 1 | விற்பனை வரி சட்டம் | 1989-90 | 38.73 | துறையில் நிலுவையிலுள்ளது |
| 2 | விற்பனை வரி சட்டம் | 1990-91 | 795.82 | துறையில் நிலுவையிலுள்ளது |
| 3 | விற்பனை வரி சட்டம் | 1992-93 | 254.33 | துறையில் நிலுவையிலுள்ளது |
| 4 | விற்பனை வரி சட்டம் | 1993-94 | 21.35 | நிராகரித்து மதிப்பீட்டு அதிகாரிக்கு திருப்பி அனுப்பப்பட்டது |
| 5 | விற்பனை வரி சட்டம் | 1993-94 | 6.91 | தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது. |
| 6 | விற்பனை வரி சட்டம் | 1994-95 | 51.6 | நிராகரித்து மதிப்பீட்டு அதிகாரிக்கு திருப்பி அனுப்பப்பட்டது |
| 7 | விற்பனை வரி சட்டம் | 1995-96 | 0.8 | நிராகரித்து மதிப்பீட்டு அதிகாரிக்கு திருப்பி அனுப்பப்பட்டது |
| 8 | விற்பனை வரி சட்டம் | 1996–97 | 15.07 | விற்பனை வரி மேல்முறையீடுகள் |
| 9 | விற்பனை வரி சட்டம் | 1997-98 | 15 | விற்பனை வரி மேல்முறையீடுகள் |
| 10 | விற்பனை வரி சட்டம் | 1997-98 | 2.28 | விற்பனை வரி மேல்முறையீடுகள் |
| 11 | விற்பனை வரி சட்டம் | 1998-99 | 2.79 | விற்பனை வரி மேல்முறையீடுகள் |
| 12 | மத்திய கலால் சட்டம் (சென்வாட் வருவாயைப் பெறுவதற்கான உரிமை) | 2008-09 | 237.94 | மேல்முறையீட்டு தீர்ப்பாயம்(கள்) |
| 13 | விற்பனை வரி சட்டம் | 2001-02 | 321.17 | துறையில் நிலுவையிலுள்ளது |
| 14 | வருமான வரி சட்டம் | 1997-98 | 940.99 | உயர் நீதிமன்றம் |
| 15 | வருமான வரி சட்டம் | 1998-99 | 341.2 | ஐடிஏடி |
| 16 | வருமான வரி சட்டம் | 2003-04 | 5.28 | ஐஏடி |
| 17 | வருமான வரி சட்டம் | 2007-08 | 25.48 | உயர் நீதிமன்றம் |
| 18 | வருமான வரி சட்டம் | 2008-09 | 36.99 | உயர் நீதிமன்றம் |
| 19 | வருமான வரி சட்டம் | 2017-18 | 26.90 | ஐடிஏடி |

## இணைப்பு-B

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் தனித்த நிதிநிலை அறிக்கைகளின் சம தேதியின் சுதந்திரமான தணிக்கையாளரின் அறிக்கைக்கு தொடர்பானது.

நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") பிரிவு 143யின் துணை பிரிவு 3யின் உட்பிரிவு (i) யின் கீழ் உள்ள உள்ளக நிதிக் கட்டுப்பாடுகள் பற்றிய அறிக்கை.

மார்ச் 31, 2023ல், அந்த குறிப்பிட்ட தேதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளின் எங்கள் தணிக்கையுடன் இணைந்து. தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் ("நிறுவனம்") நிதி அறிக்கை மீதான அகநிதிக் கட்டுப்பாடுகளை நாங்கள் தணிக்கை செய்து உள்ளோம்.

**நிறுவனத்தின் உள்முக நிதி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் நிர்வாகத்தின் பொறுப்பு**

நிறுவனத்தின் உள்முக நிதி கட்டுப்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதும், பராமரிப்பதும் நிறுவன நிர்வாகத்தின் பொறுப்பு. இதனை நிதிநிலவரம் குறித்த தகவல்களை வெளியிடுவதில் உள்முக நிதி கட்டுப்பாட்டு தணிக்கை குறித்து இந்திய தணிக்கையாளர் நிறுவனம் வெளியிட்டுள்ள வழிகாட்டு குறிப்புகளில் இடம்பெற்றுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ள வேண்டும். இதில், போதிய உள்முக நிதி கட்டுப்பாட்டுக்கான வழிமுறைகளை உருவாக்குவது, அமல்படுத்துவது மற்றும் பராமரிப்பது உள்ளிட்ட பொறுப்புகள் அடங்கும். இதனை நிறுவனங்கள் சட்டம், 2013 ல் அறிவுறுத்தப்பட்டபடி, நிறுவனத்தின் கொள்கைகளைப் பின்பற்றுவது, அதன் சொத்துக்களை பாதுகாப்பது, மோசடிகள் மற்றும் தவறுகளைக் கண்டறிவது மற்றும் தடுப்பது, கணக்குப்பதிவு ஆவணங்களை முழுமையாகவும், துல்லிய மாகவும் வைத்திருப்பது, நம்பத்தகுந்த நிதி தகவல்களை உரிய நேரத்தில் தயாரிப்பது உள்ளிட்ட தனது வர்த்தக நடவடிக்கைகளை சரியாகவும், திறமையாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் திறமையான முறையில் செயல்படுத்த வேண்டும்.

**தணிக்கையாளர்களின் பொறுப்பு**

நிதிநிலை குறித்த தகவல்களை வெளியிடும் நிறுவனத்தின் உள்முக நிதி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்து, இந்த தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் அடிப்படையில் நாங்கள் தணிக்கை செய்து கருத்துக்களை தெரிவிப்பது எங்களது பொறுப்பு. நிதிநிலை விவரங்களை வெளியிடுவதற்கான (வழிகாட்டி குறிப்பு) உள்முக நிதி கட்டுப்பாட்டு தணிக்கைக்கான வழிகாட்டி குறிப்பு மற்றும் ஐசிஏஐ வெளியிட்டுள்ள தணிக்கைக்கான தரநிலை ஆகியவற்றின் அடிப்படையில் நாங்கள் தணிக்கை மேற்கொண்டோம். இது சட்டத்தின் உள்பிரிவு 143 (10)ல் குறிப்பிட்டபடி, இந்திய தணிக்கையாளர்கள் நிறுவனம் வெளியிட்டுள்ள உள்முக நிதி கட்டுப்பாடு தணிக்கை அம்சங்கள் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த தரநிலைகள் மற்றும் வழிகாட்டி குறிப்பின்படி, நிதிநிலை குறித்த தகவல்களை வெளியிடுவதில் போதிய உள்முக நிதி கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா மற்றும் பராமரிக்கப்பட்டுள்ளதா என்பதையும், இந்த கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அனைத்து ஆவணங்களிலும் சரியாக செயல்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் உறுதிசெய்யும் வகையில் தணிக்கை செய்ய உரிய நெறிமுறைகளைப் பின்பற்றி, திட்டமிட்டு செயல்படுத்துகிறோம்.

இந்த தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அதன் செயல்பாட்டு திறன் அடிப்படையில், நிதிநிலை குறித்த தகவல்களை வெளியிடுவதில் உள்முக நிதி கட்டுப்பாட்டு அமைப்பு போதுமான அளவில் உள்ளதா என்பதற்கான தணிக்கை ஆதாரங்களைப் பெறுவதற்கு வழிமுறைகளைப் பின்பற்றி நாங்கள் தணிக்கை செய்கிறோம். ஆவணங்கள் போதுமான அளவில் இல்லாததால் ஏற்படும் இடர்களை மதிப்பிடுவது, கண்டறியப்பட்ட இடர்பாடுகளின் உள்முக கட்டுப்பாட்டுக்கான ஆய்வு மற்றும் மதிப்பீட்டுக்கான முறையை உருவாக்கி சிறப்பாக செயல்படுத்துவது ஆகியவை குறித்த இந்த தனிப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் இடம்பெற்ற தகவல்கள் அடிப்படையில், நிதிநிலை குறித்த விவரங்களை வெளியிடுவதற்கான உள்முக நிதி கட்டுப்பாட்டை புரிந்துகொள்வது ஆகியவையும் எங்களது தணிக்கை முறையில் அடங்கும். மோசடி அல்லது தவறுகளால் நிதிநிலை அறிக்கைகளில் தவறான தகவல்களை குறிப்பிடுவதற்கான ஆபத்தை மதிப்பிடுவது உள்ளிட்டவற்றுக்கு எந்த மாதிரியான வழிமுறைகளைப் பின்பற்றுவது என்பது தணிக்கையாளர்களின் முடிவைப் பொருத்தது.

நிதிநிலை குறித்த தகவல்களை வெளியிடுவதற்காக நிறுவனம் பின்பற்றும் உள்முக நிதி கட்டுப்பாட்டு அமைப்பு குறித்த எங்களது கருத்துக்களை தெரிவிப்பதற்கு எங்களிடம் உள்ள தணிக்கை ஆதாரங்கள் போதுமானதாகவும், சரியானதாகவும் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

**நிதிநிலை விவரங்களை வெளியிடுவதில் உள்முக நிதி கட்டுப்பாட்டில் உள்ள வரம்புகள்**

நிதி அறிக்கையிடல் மீதான நிறுவனத்தின் உள் நிதிக் கட்டுப்பாடு என்பது நிதி அறிக்கையின் நம்பகத்தன்மை மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க வெளிப்புற நோக்கங்களுக்காக நிதி அறிக்கைகளைத் தயாரிப்பது தொடர்பான நியாயமான உத்தரவாதத்தை வழங்க வடிவமைக்கப்பட்ட ஒரு செயல்முறையாகும். நிதி அறிக்கையிடல் மீதான ஒரு நிறுவனத்தின் உள் நிதிக் கட்டுப்பாடு அந்தக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்கியது.

(1) நிறுவனத்தின் சொத்துக்களின் பரிவர்த்தனைகள் மற்றும் மாற்றங்களை நியாயமான விவரங்களில் துல்லியமாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் பதிவுகளை பராமரிக்க தொடர்பானதாகும்;

(2) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதற்கு தேவையான பரிவர்த்தனைகள் பதிவு செய்யப்படுகின்றன என்பதற்கு நியாயமான உத்தரவாதத்தை வழங்குதல், மேலும் நிறுவனத்தின் ரசீதுகள் மற்றும் செலவுகள் நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் இயக்குநர்களின் அங்கீகாரத்தின்படி மட்டுமே உருவாக்கப் படுகின்றன. ; மேலும்

(3) நிதிநிலை அறிக்கைகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நிறுவனத்தின் சொத்துக் களை அகற்றுதல் அல்லது பயன்படுத்துதல், அங்கீகரிக்கப்படாதவை கையகப்படுத்துதல் ஆகியவற்றைத் தடுப்பது அல்லது சரியான நேரத்தில் கண்டறிவது தொடர்பான நியாயமான உத்தரவாதத்தை வழங்குதல்.

**நிதி அறிக்கையிடல் மீதான உள்முக நிதிக் கட்டுப்பாடுகளின் உள்ளார்ந்த வரம்புகள்**

நிதி அறிக்கையிடல் மீதான உள்முக நிதிக் கட்டுப்பாடுகளின் உள்ளார்ந்த வரம்புகள், கட்டுப்பாடுகளின் கூட்டு அல்லது முறையற்ற நிர்வாகத்தை மீறுவதற்கான சாத்தியக்கூறுகள் உட்பட, பிழை அல்லது மோசடி காரணமாக தவறான அறிக்கைகள் ஏற்படலாம் அல்லது கண்டறியப்படாமல் இருக்கலாம். மேலும், எதிர்கால காலகட்டங்களுக்கு நிதி அறிக்கையிடல் மீதான உள்முக நிதிக் கட்டுப்பாடுகளின் எந்தவொரு மதிப்பீட்டின் கணிப்புகளும், நிபந்தனைகளில் ஏற்படும் மாற்றங்கள் அல்லது கொள்கைகள், நடைமுறைகளுக்கு இணங்குவதற்கான அளவு காரணமாக நிதி அறிக்கை மீதான உள்முக நிதிக் கட்டுப்பாடு போதுமானதாக இல்லாமல் போகும் அபாயத்திற்கு உட்பட்டது.

**கருத்து**

எங்களது கருத்து என்பது, எங்களுக்கு கிடைத்த தகவல்கள் மற்றும் நிறுவனம் எங்களுக்கு அளித்த விளக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், மற்ற அனைத்து ஆவணங்களும் நிதிநிலை விவரங்களை வெளியிடுவதற்கான போதிய உள்முக நிதி கட்டுப்பாட்டு அமைப்பு இருப்பதைக் காட்டுகிறது. மார்ச் 31, 2023ன்படி, இந்த நிதிநிலை விவரங்களை வெளியிடுவதற்கான உள்முக நிதி கட்டுப்பாட்டு அமைப்பு சிறப்பாக செயல்படுகிறது. நிறுவனம் உருவாக்கியுள்ள நிதிநிலை விவரங்களை வெளியிடுவதற்கான உள்முக கட்டுப்பாடுகளை, நிதிநிலை விவரங்களை வெளியிடுவதற்கான உள்முக கட்டுப்பாட்டு அமைப்பை தணிக்கை செய்வதற்காக இந்திய கணக்கு தணிக்கையாளர்கள் அமைப்பு (ICAI) வெளியிட்ட வழிகாட்டி குறிப்பின்படி தணிக்கை செய்து இந்தக் கருத்தை தெரிவிக்கிறோம்.

எம்.தாமஸ் அண்ட் நிறுவனத்துக்காக

தணிக்கையாளர்கள்
நிறுவன பதிவு எண். 004408S

(A.ரொசாரியோ)
பார்ட்னர்
உறுப்பினர் எண்.021230
UDIN: 23021230BGXCZR7287

இடம் : சென்னை – 600004

தேதி : 31–10–2023

## இணைப்பு "C" தமிழ்நாடு சிமெண்ட்ஸ் லிமிடெட் தணிக்கையாளர் அறிக்கை 2022-2023 தலைமை கணக்கு தணிக்கையாளரின் வழிகாட்டுதல் பற்றிய அறிக்கை

| வ. எண். | உடன்பாடு இணைப்பு | தணிக்கையாளர்களின் கருத்துக்கள் |
|---|---|---|
| 1 | முதலீட்டைத் திரும்பப் பெறுவதற்குத் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், சொத்துக்களின் (அசாத்திய சொத்துக்கள் மற்றும் நிலம் உட்பட) மற்றும் பொறுப்புகள் (உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் பொது இருப்பு உட்பட) மதிப்பீட்டின் அடிப்படையில் ஒரு முழுமையான நிலையை தெரிவிக்கும் அறிக்கையானது, முதலீட்டைத் திரும்பப் பெறும் செயல்முறையின் முறை மற்றும் தற்போதைய நிலை ஆராயப்படலாம். | முதலீட்டைத் திரும்பப்பெறுவதற்குத் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதால் பொருந்தாது. |
| 2 | கடன்களை தள்ளுபடி செய்தல்/நீக்குதல்/கடன்கள்/ வட்டி போன்றவை ஏதேனும் உள்ளனவா, ஆம் எனில், அதற்கான காரணங்கள் மற்றும் எவ்வளவு தொகை உட்பட்டுள்ளது. | நிதி ஆண்டு 2022–23யின் காலத்தில் கடன்கள்/கடன்கள்/வட்டி போன்றவை தள்ளுபடி செய்தல் வழக்குகள் எதுவும் இல்லை. 2012ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட ரூ.480.28 லட்சத்தின் முன்பணங்கள் மற்றும் பிற வரவுகளின் பற்று இருப்புத் தள்ளுபடியை ERPல் தரவு இடமாற்றத்தின்போது அந்த ஆண்டில் இருந்து எந்த அசைவும்/விபரங்களும் இல்லாமல் புத்தகங்களில் கொண்டு செல்லப்பட்டது. |
| 3 | மூன்றாம் தரப்பினரிடம் உள்ள சரக்குகள் மற்றும் அரசு அல்லது பிற அதிகாரிகளிடமிருந்து பரிசாகப் பெறப்பட்ட சொத்துக்களுக்கு முறையான பதிவுகள் பராமரிக்கப்படுகின்றனவா? | அம்மா சிமெண்ட் திட்டம், தொடர்பான RD & PR, TNCSC மற்றும் TNCDW துறைகளின் குடோன் தொடர்பாக மூன்றாம் தரப்பினரிடம் உள்ள சரக்குகளுக்கு நிறுவனம் முறையான பதிவுகளை பராமரிக்கவில்லை. மேலும், 13105.37 மீ., டான்செம் புத்தகங்கள் மற்றும் அம்மா சிமெண்ட் விநியோக திட்ட மென்பொருள் இடையே உள்ள வித்தியாசத்திற்கு நல்லிணக்கம் நடந்து வருகிறது. எங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்களின்படி, நிறுவனம் அரசு அல்லது பிற அதிகாரிகளிடமிருந்து எந்த பரிசும் பெறவில்லை. |
| 4 | நிலுவையில் உள்ள சட்ட/நடுவர் வழக்குகளின் வயது வாரியான பகுப்பாய்வின் அறிக்கை, நிலுவையில் உள்ளதற்கான காரணங்கள் மற்றும் அனைத்து சட்ட வழக்குகளுக்கான மெய்யான/பயனுள்ள செலவினங்களின் நுட்பமான கண்காணிப்பு (வெளிநாடு மற்றும் உள்ளூர்) ஆகியவை அளிக்கப்படலாம். | நிறுவனம் பல்வேறு மேல்முறையீட்டு அதிகாரிகளுடன் வழக்கு வாரியாக நிலுவையில் உள்ள சட்ட/நடுவர் வழக்குகளின் முறையான பதிவுகளை பராமரித்து வருகிறது. இவை நிறுவனத்தின் தொடர்ச்சியான பொறுப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளன– குறிப்பு எண்:33(IV)(B)- "கணக்குகளின் ஒரு பகுதியை உருவாக்கும் குறிப்புகள்". சட்டரீதியான செலவினங்களுக்கான ஒப்புதல்கள் தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து பெறப்படும். வெளிநாட்டு சம்பந்தமான எந்தவித சட்ட வழக்குகளும் இல்லை. |

## இணைப்பு-D கூடுதல் துணை வழிகாட்டுதல்கள் 2022-2023 குறித்து AG-க்கு அறிக்கையளிக்கவும்

| வரிசை எண் | விவரங்கள் | தணிக்கையாளரின் கருத்துகள் |
|---|---|---|
| 1. | நிறுவனத்தின் விலைக் கொள்கையானது, அனைத்து நிலையான மற்றும் மாறக்கூடிய் உற்பத்திச் செலவுகள் மற்றும் மேல்நிலைப் பொருட்களின் ஒதுக்கீடுகளை உள்வாங்குகிறதா? | தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் நிறுவனம் (TANCEM) மேற்கொள்கின்ற பெரும்பாலான சிமெண்ட் சப்ளைகள், மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் (DRDA) மற்றும் பிற அரசு நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதால், அதன் விற்பனை விலையானது, அ)தொழில்துறை முதன்மைச் செயலாளர் ஆ)நிதித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர்,<br><br>இ) RD துறையின் முதன்மைச் செயலாளர்,<br><br>ஈ) TANCEM யின் நிர்வாக இயக்குநர் ஆகியோர் அடங்கிய குழு மூலம் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விலையை TANCEM முன்மொழிகிறது. அவ்வாறு முன்மொழியப்பட்ட விலையானது, நிலையான மற்றும் மாறக்கூடிய உற்பத்திச் செலவுகளை உள்ளடக்கியது. திறந்த சந்தை விற்பனைக்கான விலைகள் திறந்த சந்தை நிலைமை களைப் பொறுத்து, ஸ்டாக்கிஸ்ட், பில்டர், பிளாட் விளம்பர தாரர்கள் மற்றும் அரசாங்க ஒப்பந்ததாரர்கள் மூலம் திறந்த சந்தை விற்பனைக் கான விலைகள், உள்முக விலைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் TANCEMயின் நிர்வாக இயக்குநரால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படுகின்றன. திறந்த சந்தை விற்பனைக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையானது நிலையான மற்றும் மாறக்கூடிய விலை இரண்டையும் உள்ளடக்கியது.<br><br>TANCEM நிறுவனம் விலை நிர்ணயம் செய்வதற்கான முன்மொழிவு கடிதத்தை கீழ்க்கண்ட விவரத்துடன் அனுப்பியது:<br><br>TANCEM D. O. கடித எண். TANCEM / DRDA / விலை நிர்ணயம் / 2021-22 தேதியிடப்பட்டது 23.07.2021 அரசின் முதன்மைச் செயலர், தொழில் துறை செயலகம்,<br><br>சென்னை09.<br><br>16.11.2021 தேதியிட்ட கடிதம் எண்.(D) எண்.117 மூலம் தொழில்துறை செயலகம், DRDA மற்றும் பிற அரசு துறைகளுக்கு சிமெண்ட் வழங்குவதற்கு பின்வரும் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. |

| | | OPC | PPC |
|---|---|---|---|
| | | விலை ஒரு பை வீதம் | |
| அ) | பணம் செலுத்தும் அடிப்படையில் | ரூ.346 | ரூ.320 |
| ஆ) | 60 நாட்கள் கடன் அடிப்படையில் | ரூ.351 | ரூ.325 |

| | | |
|---|---|---|
| 2. | சாதாரண இழப்புகளுக்கான நிலையான விதிமுறைகள் மற்றும் வழக்கத்திற்கு மாறான இழப்புகளை மதிப்பிடுவதற்கான அமைப்பு நடைமுறையில் உள்ளதா. | 1. சிமெண்ட் உற்பத்தி என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறைத் தொழிலாகும், மேலும் சிமெண்ட் உற்பத்தி செயல்முறையின் போது உற்பத்தி இழப்பு ஏற்படுவதில்லை. வீண் விரயங்களை மீண்டும் பயன்படுத்துகிற செயல்பாடு நடைபெறுகிறது.<br><br>2. சப்ளையர்களிடமிருந்து பொருட்களைப் பெறும்போது, ஜிப்சம், சாம்பல் போன்ற சில பொருட்கள் ஈரப்பதம் காரணமாக இழப்பை ஏற்படுத்தும், இது ஆய்வகத்தின் சான்றிதழ்களின் அடிப்படையில் பொருளின் நுகர்வு விலையுடன் கணக்கிடப்படுகிறது.<br><br>3. TANCEM ஆனது அசாதாரண இழப்பைத் தவிர்ப்பதற்காக உள்ளார்ந்த சோதனை மற்றும் உள்ளார்ந்த கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது.<br><br>4. கடைசியாக 2020ம் ஆண்டில் ஆற்றல் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், அடுத்த ஆண்டுகளில் ஆற்றல் தணிக்கையை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் நிறுவனம் கூறியுள்ளது. |
| 3. | துணை தயாரிப்புகள் மற்றும் முடிக்கப்பட்ட தயாரிப்புகளின் மதிப்பீட்டு முறை என்ன? அதன் அறிவிக்கப்பட்ட கொள்கையில் இருந்து விலகிய வழக்குகளை பட்டியலிடவும். | அ) நிறுவத்திற்கு துணை தயாரிப்புகள் எதுவும் இல்லை. எனவே பொருந்தாது.<br><br>ஆ) முடிக்கப்பட்ட பொருட்களின் இறுதி இருப்பு விலை அல்லது சந்தை விலையில் எது குறைவாக இருந்தாலும் மதிப்பிடப்படுகிறது. |
| 4. | சேதமடைந்த கடைகள் மற்றும் மூடப்பட்ட யூனிட்களின் உதிரிபாகங்களின் தாக்கம் குறித்து புத்தகங்களில் சரியாகக் கணக்கிடப்பட்டுள்ளதா? | ஆண்டு முழுவதும் யூனிட் மூடப்படுவது இல்லை. |

<table>
<tr>
<td>5.</td>
<td>நிறுவனம், இருப்பு மதிப்பீடு, அசையாத சொத்துக்களுக்கான பராமரிப்பு மற்றும் நேரடி சரிபார்ப்பின்போது கவனிக்கப் படும் பற்றாக்குறைகள்/ அதிகப்படியான விளைவுகளை சரிசெய்வதற்கு பயனுள்ள நேரடி அமைப்பு முறையை கொண்டுள்ளதா?</td>
<td>எங்களுக்கு விளக்கப்பட்டது மற்றும் எங்களால் சேகரிக்கப்பட்டபடி பதிவுகளின் அடிப்படையில், 2022–23ம் ஆண்டில் நிர்வாகத் தால் வடிவமைக்கப்பட்ட குழுவால் சரக்குகளின் நேரடி சரிபார்ப்பு நியாயமான இடைவெளியில் இல்லாவிட்டாலும் மேற்கொள்ளப்பட்டது.<br><br>நிர்வாகமானது, பின்வரும் பொருட்கள் காலாவதியானவை மற்றும் விற்பனையற்றவை என ஆண்டு முழுவதும் அடையாளப்படுத்தியுள்ளது.<br><br>(ரூ. லட்சத்தில்)<br><br>
<table>
<tr><th></th><th>அரியலூர்</th><th>ஆலங்குளம்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>கிடங்கில் காலாவதியானவை</td><td>32.81</td><td>62.61</td><td>95.42</td></tr>
<tr><td>கிடங்கில் விற்பனையற்றவை</td><td>195.84</td><td>113.81</td><td>309.65</td></tr>
</table>
<br>மேற்கூறிய பொருட்களின் மதிப்பில் சரிவு கண்டறியப்படவில்லை மற்றும் கணக்குப் புத்தகங்களில் எந்த ஏற்பாடும் செய்யப்பட வில்லை.<br><br>அம்மா சிமெண்ட்ஸைப் பொறுத்தவரை, பல்வேறு குடோன்களில் நிலுவையில் உள்ள கையிருப்பை TANCEM அதிகாரியால் நேரடியாக சரிபார்க்கப்படவில்லை.<br><br>மேலும் சில குடோன்களில் கையிருப்பு உள்ளதற்கான உறுதிப்பாடுகள் பெறப்படவில்லை.</td>
</tr>
<tr>
<td>6.</td>
<td>கனிம பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நிறுவனம் கைவிடப்பட்ட/முழுமையாக தீர்ந்துபோன சுரங்கங்கள் தொடர்பாக சுரங்க மூடல் திட்டத்தை தயாரித்துள்ளதா? அப்படியானால், சுரங்கங்கள் மூடப்பட்டதற்கான செலவை வரவழைத்து கணக்குகளில்பதிவு செய்ய வேண்டும். சுரங்கங்களின் செயல் பாட்டிற்கான சுற்றுச்சூழல் அனுமதிக்கான நிலை மதிப்பாய்வு செய்யப்படலாம்.</td>
<td>இந்த ஆண்டில் நிறுவனம் எந்த சுரங்கத்தையும் மூடவில்லை/ கைவிடவில்லை. எவ்வாறாயினும், சுரங்கத்தை மூடுவதற்கான செலவினங்களை ஆண்டு அடிப்படையில் வழங்கியுள்ளது. மற்றும் 2022–23ம் ஆண்டில் ரூ.161.43 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக மொத்தம் ரூ.230.42 மார்ச் 31, 2023 நிலவரப்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. TANCEM நிறுவனத்திற்கு சொந்தமான பல்வேறு சுரங்கங்களுக்கான சுற்றுச்சூழல் அனுமதி உரிய அதிகாரியின் முன் ஒப்புதலுக்காக நிலுவையில் உள்ளது. நிர்வாகம் அளித்த தகவலின்படி, அரியலூர் சிமெண்ட் யூனிட்டில் ஏற்கனவே உள்ள ஐந்து சுரங்க குத்தகைகளில் இரண்டு சுரங்க குத்தகைகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டது. ஆலங்குளம் யூனிட்டில் ஐந்து சுரங்க குத்தகைகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது நடந்து வருகிறது.</td>
</tr>
<tr>
<td>7.</td>
<td>நிறுவப்பட்ட திறனுடன் ஒப்பிடும்போது ஆலை மற்றும் இயந்திரங்களின் பயன்பாட்டின் அளவைக் குறிப்பிடவும்.</td>
<td>இணைப்பு D1 ஐப் பார்க்கவும்</td>
</tr>
</table>

**இணைப்பு D1 – நிறுவப்பட்ட திறனுக்கு எதிராக ஆலை மற்றும் இயந்திரங்களைப் பயன்படுத்துதல் 2022–2023**

| விவரங்கள் | நிறுவப்பட்ட திறன் MTS யில் | பயன்பாடு (தயாரிப்பு) MTS யில் | % | கருத்துக்கள் |
|---|---|---|---|---|
| சிமெண்ட் அலகுகள் | | | | |
| 1) அரியலூர் சிமெண்ட் வேலைகள் (0.5 MTPA) | 5,00,000 | 4,88,636 | 97.73 | இல்லை |
| (2) அரியலூர் விரிவாக்க ஆலை | 11,30,000 | 9,62,685 | 85.19 | இல்லை |
| (3) ஆலங்குளம் சிமெண்ட் வேலைகள் | 2,90,000 | 3,55,160 | 122.47 | இல்லை |
| கல்நார் பொருட்கள் | | | | |
| (1) கல்நார் கூரைத்தகடுகள் ஆலங்குளம் | 28,500 | 0 | 0 | இல்லை |
| சுட்ட மண்குழாய் பொருட்கள் | | | | |
| (1) சுட்ட மண்குழாய் தொழிச்சாலை விருத்தாச்சலம் | 7,200 | 0 | 0 | இல்லை |

M.THOMAS & CO.,
CHARTERED ACCOUNTANTS
Flat No.G-11, Marina Square,
No.53/27 Santhome High Road
Mylapore, Chennai -600 004

Phone:24641878/24958013
E-mail: cleancheck@mthomasco.com

## INDEPENDENT AUDITOR'S REPORT

**To the Members of Tamil Nadu Cements Corporation Ltd**

**Report on the Audit of the Standalone Financial Statements**

**Opinion**

We have audited the Standalone Financial Statements of TAMIL NADU CEMENTS CORPORATION LIMITED ("the Company"), which comprise the Balance Sheet as at 31 March 2023, the Statement of Profit and Loss, and the Statement of Cash Flows for the year then ended and notes to the financial statements, including a summary of the significant accounting policies and other explanatory information (hereinafter referred to as "Standalone Financial Statements").

In our opinion and to the best of our information and according to the explanations given to us, and subject to the matters referred to in the Basis for Qualified Opinion paragraph below, the aforesaid Standalone Financial Statements give the information required by the Companies Act, 2013 ("the Act") in the manner so required and give a true and fair view in conformity with the accounting principles generally accepted in India, of the state of affairs (financial position) of the Company as at 31 March, 2023, and its profit, and its cash flows for the year ended on that date.

**Basis for Opinion**

We conducted our audit in accordance with the Standards on Auditing (SA's) specified under section 143 (10) of the Act. Our responsibilities under those standards are further described in the auditor's responsibilities for the audit of the financial statements section of our report. We are independent of the Company in accordance with the code of ethics issued by the Institute of Chartered Accountants of India (ICAI) together with the ethical requirements that are relevant to our audit of the financial statements under the provisions of the Act and the rules thereunder, and we have fulfilled our other ethical responsibilities in accordance with these requirements and the ICAI's code of ethics.

We believe that the audit evidence we have obtained is sufficient and appropriate to provide a basis for our opinion.

**Basis for Qualified Opinion**

## 32. குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள்

**i) கணக்கு தயாரிப்புக்கான அடிப்படை:**

இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான கணக்குப்பதிவு கொள்கைகள் மற்றும் நிறுவனங்கள் (கணக்குப்பதிவு) விதிகள் 2014ல் உள்ள விதிகளுடன் நிறுவனங்கள் சட்டம், 2013ல் உள்ள உரிய வழிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குப்பதிவு தரநிலை, இந்திய கணக்கு தணிக்கையாளர்கள் நிறுவனத்தின் பிற அறிவிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில், வரலாற்றுப் பூர்வமான செலவு முறைகளின்கீழ் கணக்குப்பதிவுக்கான திரட்டுதல் முறையின் அடிப்படையில் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

**ii) மதிப்பீடுகளைப் பயன்படுத்துதல்**

இந்தியாவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்குப்பதிவு கொள்கைகளுடன் நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கு நிர்வாகம் மதிப்பீடுகளையும், யூகங்களையும் அளிக்க வேண்டியது அவசியம். இது நிதிநிலை அறிக்கை தேதியின்படி கொடுக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் அளவு, ஆண்டுக்கான வருவாய் மற்றும் செலவினம், நிதிநிலை அறிக்கை தேதியின்படி, வெளியிடப்பட்டுள்ள பொறுப்புகள் ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தச் செய்யும். நிதிநிலை அறிக்கை தேதியின்படி, நிர்வாகம் மதிப்பிட்டுள்ள உரிய தகவல்கள் மற்றும் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டே நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு, மதிப்பீடுகளும், யூகங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. உண்மையான முடிவுகள் என்பவை, இந்த மதிப்பீடுகளிலிருந்து வேறுபட்டிருக்கலாம்..

**iii) இருப்புகள் மதிப்பீடு**

இருப்புகளின் மதிப்புகள் என்பது, செலவினம் அல்லது கைக்கு கிடைக்கக் கூடிய மதிப்பு, எது குறைவாக உள்ளதோ, அதன் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. செலவினம் என்பது கீழ்க்காணும் விவரங்கள் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது.:

| சரக்கு | கணக்கியல் அடிப்படை |
|---|---|
| 1. மூலப் பொருட்கள் | சராசரி செலவினத்திலிருந்து ஜிஎஸ்டி கழிக்கப்படும். 31.03.2023ன்படி நமது மத்திய சேமிப்பு மையங்களில் பெறப்பட்டு ஆய்வு அதிகாரிகளால் சான்றிதழ் அளிக்கப்பட்ட பொருட்கள் மட்டும் சேர்க்கப்படுகிறது. |
| 2. சுற்றப்பட்ட பொருட்கள் | செலவு காப்பீடு போக்குவரத்து மதிப்பு, ஒப்புதல் கட்டணம் உள்ளிட்ட உள்நாட்டு சரக்குப் போக்குவரத்து மற்றும் சுங்கத் தீர்வை |
| 3. இருப்பு மையங்கள், உதிரி பாகங்கள், நுகரக் கூடியவை, பொட்டலத்தில் அடைக்கும் பொருட்கள் | சராசரி செலவினத்திலிருந்து ஜிஎஸ்டி கழிக்கப்படும். 31.03.2023ன்படி நமது மத்திய சேமிப்பு மையங்களில் பெறப்பட்டு ஆய்வு அதிகாரிகளால் சான்றிதழ் அளிக்கப்பட்ட பொருட்கள் மட்டும் சேர்க்கப்படுகிறது. |
| 4. மருந்துகள் | வருடாந்திர சராசரி மதிப்பீட்டு செலவு |
| 5. எழுதுபொருட்கள் | வருடாந்திர சராசரி மதிப்பீட்டு செலவு |
| 6. பயன்படுத்தப்படும் பொருட்கள் | குறைந்தபட்ச செலவு அல்லது கிடைக்கக் கூடிய மதிப்பு |
| 7. செய்து முடிக்கப்பட்ட பொருட்கள் | ஜிஎஸ்டி சேர்க்கப்படாமல் குறைந்தபட்ச செலவு அல்லது கிடைக்கக் கூடிய மதிப்பு |
| 8. வர்த்தகம் செய்யக் கூடிய பொருட்கள் இருப்பு | ஜிஎஸ்டியை கழித்து வாங்கிய விலை |
| ஏ. வியாபார இருப்பு | வாங்கும் விலையில ஜி.எஸ்.டி. கழிக்க |

நடைமுறை பணிக்கான செலவுகள் மற்றும் தயாரித்து முடிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு என்பது, அனைத்து நேரடி செலவினங்கள் மற்றும் பொருட்களை தற்போதைய இடத்துக்கும், சூழலுக்கும் கொண்டுவருவதற்கான உற்பத்திச் செலவுகளையும் உள்ளடக்கி இருக்கும்.

**iv) ரொக்கப் புழக்கம் குறித்த அறிக்கைகள்**

மறைமுக முறையைப் பயன்படுத்தி ரொக்கப் புழக்க தகவல்கள் சேர்க்கப்படுகின்றன. இதில், ரொக்கமற்ற பரிவர்த்தனைகள், ஏதாவது தாமதம் ஏற்படுவது அல்லது கடந்தகால அல்லது எதிர்கால பணம் வர வேண்டியது அல்லது செலுத்த வேண்டியது ஆகியவை வரிக்கு முந்தைய வருவாயில் சரிசெய்யப்படும். வழக்கமாக கிடைக்கும் வருவாய், நிறுவனம் அளிக்கும் நிதி மற்றும் முதலீட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் பணப் புழக்கம் ஆகியவை தனித்தனியாக பிரிக்கப்படும்.

**v) நிதிநிலை அறிக்கை தேதிக்குப் பிறகு ஏற்படும் நெருக்கடிகள் மற்றும் நிகழ்வுகள்**

நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படும் தேதிக்கும், நிதிநிலை அறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்படும் தேதிக்கும் இடையேயான காலத்தில் ஏற்படும் நிகழ்வுகளால், நிதிநிலை அறிக்கை தேதியில் உள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளில் மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும் அல்லது தனியாக விவரங்களை தெரிவிக்க வேண்டிவரும். நிதிநிலை அறிக்கை தேதிக்குப் பிறகு ஏற்படும் நிகழ்வுகளால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் செய்யப்பட வேண்டிய மாற்றங்களுக்காக அளிக்கப்படும் கூடுதல் தகவல்கள், நிதிநிலை அறிக்கை தேதியில் குறிப்பிடப்பட்ட சூழலில் தொகையை தீர்மானிப்பதில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். நிதிநிலை அறிக்கை தேதிக்குப் பிந்தைய நிகழ்வுகளால், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் பாதிப்பை ஏற்படுத்தாவிட்டாலும், நிதிநிலை அறிக்கையில் ஆவணமாக குறிப்பிட வேண்டும் என்ற நிலை இருந்தால், அதனை குறிப்பிட வேண்டும்.

தகவல்களை அளித்ததற்குப் பிறகு நிறுவனம் அறிவிக்கும் பங்காதாயங்கள், குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் பொறுப்பாக அங்கீகரிக்கப்பட மாட்டாது. நிதிநிலை அறிக்கை காலத்துக்கும், நிதிநிலை அறிக்கையை வெளியிடுவதற்கும் இடைப்பட்ட காலத்தில் அறிவிக்கப்படும் பங்காதாயங்கள், பொறுப்பாக அங்கீகரிக்கப்பட மாட்டாது. ஏனெனில், அந்த நேரத்தில் எந்தவொரு பொறுப்பும் இருப்பதில்லை. இதுபோன்ற பங்கு பலன்களை நிதிநிலை அறிக்கைகளின் குறிப்புகளாக வெளிப்படுத்தலாம்.

**vi) குறிப்பிட்ட காலம், குறிப்பிட்ட காலத்துக்கு முந்தைய நிகர லாபம் அல்லது இழப்பு மற்றும் கணக்குப்பதிவு கொள்கையில் ஏற்படும் மாற்றங்கள்**

குறிப்பிட்ட வகை பொருட்கள் அல்லது அரிதான பொருட்கள் மற்றும் முந்தைய கால வருவாய் மற்றும் செலவினம் ஆகியவை கணக்குப்பதிவு தரநிலைக்கு ஏற்ப கணக்கிடப்படும்.

**vii) வருவாய் கணக்கீடு**

அ. விற்பனை என்பது குறிப்பிட்ட இடர்பாடுகள் மற்றும் சரக்குகளுக்கான உரிமையை வாங்குவோருக்கு வழங்குவதற்கான பரிசாக அங்கீகரிக்கப்படுகிறது. இது நிகர ஜிஎஸ்டியில் குறிப்பிடப்படுகிறது.

ஆ. காலச்சூழல் அடிப்படையில், வட்டி வருவாய் அங்கீகரிக்கப்படுகிறது.

இ. பழைய பொருட்களுக்கு எந்தவொரு மதிப்பும் கொடுக்கப்படுவதில்லை. அவற்றை விற்பதால் கிடைக்கும் தொகையானது, அந்த ஆண்டில் இதர வருவாயாக காட்டப்படும்.

**viii) சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் மற்றும் தேய்மானம்**

பொருட்களின் சொத்து மதிப்பானது, பொருட்களை வாங்கும்போது ஏற்பட்ட செலவு அல்லது கட்டுமானத்தில் ஏற்பட்ட செலவிலிருந்து ஒட்டுமொத்த தேய்மானத்தைக் கழித்த பிறகு கணக்கில் கொள்ளப்படுகிறது.

பொருட்களுக்கான செலவில், அந்தப் பொருட்களை வாங்குவதற்கான செலவு மற்றும் அதனை செயல்படும் சூழலுக்கு கொண்டுவருவதற்கான செலவு சேர்க்கப்படுகிறது.

திருத்தப்பட்ட நிறுவனங்கள் சட்டம், 2013ன் இரண்டாவது அட்டவணையின்படி, சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையின் நேரடி முறையின்கீழ் நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம் கணக்கிடப்படுகிறது. நிலையான சொத்துக்களில் சேர்க்கை/நீக்கம் ஏற்படும்போதும், சேர்க்கை/நீக்கம் வரையான காலம் வரை தேய்மானம் கணக்கிடப்படுகிறது.

நடப்பு மூலதனம் என்பது, சொத்துக்கள் பயன்பாட்டுக்கு வராத வரை செய்யப்படும் வரிகள், தீர்வுகள் மற்றும் மற்ற செலவினங்களை உள்ளடக்கியதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும்.

**ix) முதலீடுகளை கணக்கிடுதல்**

அ. குறைந்தபட்ச செலவு அல்லது உண்மையான சந்தை மதிப்பு அடிப்படையில் தற்போதைய முதலீடுகள் மதிப்பீடு செய்யப்படும்.

ஆ. நீண்ட கால முதலீடுகளின் மதிப்பு, தற்காலிகமானதாக இல்லாத அளவில் உள்ள மதிப்புக் குறைவுகளைக் கழித்த பிறகு கணக்கீடு செய்யப்படும்.

**x) தொழிலாளர்களின் பலன்களுக்கான கணக்குப்பதிவு**

**அ. வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டம்:**

வருங்கால வைப்புநிதி, ஓய்வூதியத் திட்டம் மற்றும் பிற தொழிலாளர் நலனுக்கான நிறுவனத்தின் பங்களிப்புகள் வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாக கருத்தில் கொள்ளப்படும். இதுதொடர்பான சேவைக்கு ஏற்ப ஆண்டின் வரவு, செலவுக் கணக்கில் மதிப்பீடு செய்யப்படும்.

**ஆ. வரையறுக்கப்பட்ட பலன் திட்டம்:**

ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் உண்மையான மதிப்பு அடிப்படையில் பங்கு லாப முறை அடிப்படையில் வரையறுக்கப்பட்ட பலன் திட்டங்கள் கணக்கீடு செய்யப்படும். உண்மையான லாபம்/ இழப்பானது உடனடியாக வரவு, செலவு கணக்கில் சேர்க்கப்படும்.

**xi) கடன் செலவு**

நிலையான சொத்துக்களுக்கு நிதி அளிப்பதற்காக பெறப்படும் கடனுக்கான வட்டியானது, அந்த சொத்தினை வாங்கிய நோக்கத்தின் அடிப்படையில் பயன்படுத்தத் தயாராவதற்கு குறிப்பிட்ட காலம் எடுத்துக்கொண்டால் மட்டுமே நிலையான சொத்தின் மீது சேர்க்கப்படும். மற்ற செலவினங்கள் அனைத்தும் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் கடன் செவினமாகவே வருவாய் செலவுக் கணக்கு அறிக்கையில் சேர்க்கப்படும்.

**xii) பிரிவு வாரியான தகவல் பதிவு**

செயல்பாட்டுப் பிரிவு என்பது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் ஒரு பிரிவாக இருக்கும். நிறுவனத்தின் மற்ற பிரிவுகளுடன் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகள் தொடர்பான வருவாய் மற்றும் செலவினம் உள்ளிட்ட கிடைக்கும் வருவாய் மற்றும் ஏற்படும் செலவினங்கள் கணக்கில் கொள்ளப்படும். இதுதொடர்பான விரிவான நிதி தகவல்கள் இடம்பெற்றிருக்கும். பிரிவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவும், அதன் செயல்பாடுகளை மதிப்பிடவும் அனைத்து செயல்பாட்டுப் பிரிவுகளின் செயல்பாட்டு விவரங்களை நிறுவனத்தின் இயக்குநர்கள் வாரியம் ஆய்வுசெய்யும். நிறுவனம் என்ற ஒட்டுமொத்த அடிப்படையில் நிதிநிலை அறிக்கையை தயாரிப்பது மற்றும் அளிப்பதற்காக பின்பற்றப்படும் கணக்குப்பதிவு கொள்கைகளின் அடிப்படையிலேயே பிரிவு வாரியான தகவல்கள் தயாரிக்கப்படும். இந்தியாவிலேயே செயல்படும் நிறுவனமாகவும், அதன் உற்பத்தி அமைப்புகள் மற்றும் விற்பனை

ஆகியவை இந்தியாவுக்குள்ளேயும் இருக்க வேண்டும். இதனடிப்படையில், இரண்டாம் நிலை பிரிவுகள் எதுவும் குறிப்பிடப்பட மாட்டாது. பிரிவு வாரியான தரவுகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(ரூபாய் லட்சத்தில்)**

| விவரங்கள் | சிமெண்ட் பகுதி | ஷீட் பகுதி | பைப் பகுதி | DRDA வழங்குதல் | அம்மா சிமெண்ட் வழங்கும் திட்டம் | 2021–23 மொத்தம் | 2021–22 மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஒட்டுமொத்த வரவு | 92476.80 | | 0.01 | - | 9455.03 | 101931.84 | 80307.71 |
| மற்ற பிரிவுகள் | - | - | - | - | - | - | - |
| கூட்டுத் தொகை | 92476.80 | - | 0.01 | - | 9455.03 | 101931.84 | 80307.71 |
| ஒட்டுமொத்த வருவாய் | 92476.80 | - | 0.01 | - | 9455.03 | 101931.84 | 80307.71 |
| ஒட்டுமொத்த செலவு | 73764.99 | 22.87 | 66.34 | - | 9455.78 | 83309.98 | 62554.52 |
| பிரிவு முடிவுகள் | 18711.81 | (22.87) | (66.33) | - | (0.75) | 18621.86 | 17753.19 |
| பிரிவு பொறுப்பு | 73549.35 | 154.18 | 6.77 | 731.37 | 2167.07 | 76608.74 | 86078.59 |
| பிரிவு சொத்துகள் | 96766.08 | 163.38 | 74.31 | 1214.92 | 2291.53 | 100510.22 | 94342.00 |
| வாங்கப்பட்ட நிரந்தர சொத்துக்கள் | 4827.10 | - | 0.62 | - | 0.48 | 4828.20 | 120.16 |
| தேய்மானம் | 4326.10 | 0.49 | 0.66 | - | 9.13 | 4336.38 | 4208.19 |
| பணி மூலதனம் | 78504.57 | 9.21 | 67.54 | 483.54 | 124.46 | 79189.32 | 71036.60 |

**xiii) தொடர்புள்ள நபர்கள் குறித்த விவரங்கள்**

**(a) தொடர்புடைய நபர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கு நிறுவனத்துடனான தொடர்பு**

**தமிழ்நாடு அரசு பங்கு மூலதனத்தை 100% வைத்திருப்பவர்**

**(b) ஆ. முக்கிய நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்கள்**

**1. மேலாண் இயக்குநர்/ தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்**

**திரு.சி.காமராஜ், ஐஏஎஸ் (24.03.2022 31.05.2023)**

**2. முதன்மை நிதி அதிகாரி**

**திரு.ஏ.அர்ஜுனன் (15.09.2021 இதுநாள் வரை)**

**3. நிறுவன செயலாளர்**

**திருமதி. டாக்டர் லட்சுமி மணிய**

**குறிப்பு :** மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்புடைய நபர்கள் மற்றும் அவர்களது உறவு, நிறுவனத்தில் உள்ள தகவல்களைப் பொறுத்தே.

**நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு குறிப்பிட்ட ஆண்டில் ஊதியம் வழங்கப்பட்ட விவரங்கள்**

| விவரங்கள் | 2022–23 | 2021–22 |
|---|---|---|
| | ரூபாய் லட்சத்தில் | |
| அ) மேலாண்மை இயக்குநர் | 40.83 | 29.49 |
| ஆ) தலைமைநிதி அலுவலர் | 22.78 | 16.82 |
| இ) நிறுவனத்தின் செயலாளர் | 11.60 | 9.71 |
| **மொத்தம்** | 75.21 | **56.02** |

**அறிக்கை இடம்பெற்றுள்ள காலத்தின் நிறைவில் நிர்வாகிகளுக்கு அளிக்கப்பட வேண்டிய ஊதியம் ரூ.6.46 லட்சம் (மேலாண் இயக்குநர் ரூ.3.50 லட்சம், நிறுவனச் செயலாளர் ரூ.1 லட்சம் மற்றும் தலைமை நிதி அதிகாரி ரூ.1.96 லட்சம்)**

**xiv) குத்தகைகள்**

நிறுவனம் மேற்கொண்டுள்ள குத்தகை இடங்களில் உரிமம் தொடர்பான அனைத்து இடர்பாடுகள் மற்றும் பலன்கள், நிதி குத்தகைகளாக வரையறுக்கப்படுகிறது. இந்த சொத்துக்களை குத்தகைக்கு எடுக்கும்போது, அந்த சொத்தின் முக மதிப்பு அல்லது குறைந்தபட்ச குத்தகை தொகையின் தற்போதைய மதிப்பு ஆகியவற்றில் எது குறைவோ, அந்தத் தொகைக்கு எடுத்துக் கொள்ளப்படும். குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான அனைத்து இடர்பாடுகள் மற்றும் பலன்களை குத்தகைக்கு விடுபவரே ஏற்றுக் கொள்வதற்கு செயல்பாட்டு குத்தகை என்று வரையறை செய்யப்படுகிறது. செயல்பாட்டு குத்தகை செலவினம் என்பது, வரவு செலவு கணக்கு அறிக்கையில் செலவினமாக குத்தகைக்கு எடுத்துக் கொள்ளப்படும் கால அளவுக்கு அங்கீகரிக்கப்படுகிறது.

**xv) ஒவ்வொரு பங்குக்கும் கிடைக்கும் வருவாய்**

ஒவ்வொரு பங்குக்கும் கிடைக்கும் அடிப்படை வருவாய் என்பது, குறிப்பிட்ட காலத்தில் கிடைத்த நிகர வருவாய் அல்லது இழப்பை அந்த ஆண்டில்/காலத்தில் அவர்களிடம் சராசரியாக உள்ள பங்குகளின் எண்ணிக்கையுடன் வகுத்து கணக்கிடப்படுகிறது. ஒவ்வொரு பங்குக்கும் கிடைக்கும் நீர்த்த வருவாயை கணக்கிடுவதற்காக, பங்குதாரர்களுக்கான ஆண்டின் வருவாய் மற்றும் அந்த காலகட்டத்தில் வைத்திருந்த சராசரி பங்குகளை மற்ற கூடுதலான பங்குகளின் அளவுடன் சரிசெய்து கணக்கிடப்படும்.

**xvi) வருமான வரிகளுக்கு கணக்கு**

இந்தியாவில் வகுக்கப்பட்டுள்ள வருமானவரிச் சட்டம், 1961ல் உள்ள பொறுப்புகளின் அடிப்படையில் நடப்பு வரி கணக்கிடப்படுகிறது. வரி அளவை கணக்கிடுவதற்காக ஏற்கனவே வகுக்கப்பட்ட அல்லது குறிப்பிட்ட தேதி வரை வகுக்கப்பட்ட வரிச் சட்டங்கள் மற்றும் வரிவிகிதங்கள் பின்பற்றப்படும். முன்கூட்டியே வரி செலுத்துவது என்பது நடப்பு ஆண்டில் உள்ள கால வேறுபாடுகளால் வரியில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வரும் காலங்களில் அதனைப் பயன்படுத்துவதன் அடிப்படையில் கணக்குப்பதிவு செய்யப்படுகிறது. முன்கூட்டிய வரியை ஏற்கனவே உள்ள வரிவிகிதம் அல்லது நிதிநிலை அறிக்கையில் தேதியில் வகுக்கப்படும் வரிவிகிதம் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. தேய்மானம் மற்றும் பிற காரணங்களால், கால வேறுபாட்டில் கணக்குப்பதிவில் முன்கூட்டிய வரிப் பொறுப்பு ஏற்படும்போது அதுவும் ஏற்றுக் கொள்ளப்படும். முன்கூட்டிய வரி சொத்துக்கள், காரணத்துடன்/ உண்மையாக ஏற்றுக் கொள்ளும் வகையில், எதிர்காலத்தில் பயன்படுத்திக் கொள்வதாக இருந்தால் மட்டுமே அங்கீகரிக்கப்படும். ஒவ்வொரு நிதிநிலை அறிக்கை தேதியிலும் அதனை எடுத்துச் செல்வதற்காக அதன் உண்மைத்தன்மை மறுஆய்வு செய்யப்படும்.

**xvii) புலப்படாத சொத்துக்கள்**

"ஆலை ஒருங்கிணைப்பு மற்றும் ஆலை செயல்பாட்டு மேம்பாட்டு அமைப்பு மென்பொருளை" அமல்படுத்தியதை உள்ளடக்கியதாக கண்ணுக்குப் புலனாகாத சொத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இது 2012–13ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தொடக்க கால ஒப்புதலுக்குப் பிறகு, ஒவ்வொரு ஆண்டும் அதன் மதிப்புக் குறைக்கப்படுவதுடன், ஏற்படும் இழப்புடன் கழித்து சொத்தாக மதிப்பிடப்பட்டு வருகிறது. நிறுவனங்கள் சட்டம், 2013ன் இரண்டாவது அட்டவணைப் படி, கண்ணுக்குப் புலனாகாத நிலையான சொத்துக்கள் கணக்கிடப்படுகின்றன.

**xviii) மதிப்புகுறைந்த சொத்துக்கள்**

நிறுவனத்தின் நிலையான சொத்துக்களை ஒவ்வொரு நிதிநிலை அறிக்கை தேதியிலும் கொண்டுசெல்லும்போது, அது அதிகஅளவில் மதிப்பிடப்பட்டுள்ளதற்கு வாய்ப்பு உள்ளதா என்று பரிசீலிக்கப்படும். அவ்வாறு ஏதாவது காரணிகள் தென்பட்டால், அந்த சொத்தை மீட்டெடுப்பதற்கான மதிப்பு கணக்கிடப்படும். உண்மையான தொகையைவிட கணக்கில் சேர்க்கப்படும் தொகை அதிகமாக இருக்கும்போது, சொத்துக்களின் மதிப்புகுறைந்த இழப்புகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

வருவாயை அளிக்கும் பிரிவுகளின் கணக்கில் குறிப்பிட்ட தொகையைவிட, உண்மையான தொகை அதிகமாக இருக்கும்போது, கணக்குப்பதிவு தரநிலை 28–ன் கீழ் அது சொத்து இழப்பாக கருதப்பட மாட்டாது.

**xix) தற்செயலான பொறுப்புகள் மற்றும் சொத்துக்கள்**

கடந்தகால சம்பவங்கள் அடிப்படையில், தற்போதைக்கு செலுத்த வேண்டிய தொகைக்கான வழிமுறையை நிறுவனம் உருவாக்கியுள்ளது. இதன்படி, நிதியைப் பயன்படுத்த வேண்டிய தேவை இருக்க வாய்ப்பு உள்ளதால், அதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். தற்போதைய பொறுப்பின் அடிப்படையில், எதிர்காலத்தில் செலுத்த வேண்டியிருக்கலாம் அல்லது செலுத்த வேண்டியதில்லை என்ற அடிப்படையில், தற்செயலான பொறுப்புகள் குறித்த தகவல்களை தெரிவிக்க வேண்டும். தற்போதைய பொறுப்புகளை நீண்டகாலத்துக்குப் பிறகு செலுத்த வேண்டியிருக்கும் என்ற நிலை இருந்தால், அதற்கான வழிமுறையையோ அல்லது தகவல்களையோ தெரிவிக்க வேண்டியதில்லை. தற்செயலான சொத்துக்கள் குறித்து நிதிநிலை அறிக்கையில் அங்கீகரிக்கவோ அல்லது வெளிப்படுத்தவோ தேவையில்லை.

**33 நிதிநிலை அறிக்கை தயாரிப்பில் மற்ற குறிப்புகள் மற்றும் வெளிப்படுத்த வேண்டியவை**

**i. தமிழ்நாடு அரசு மற்றும் வங்கிகளிடமிருந்து நீண்டகால மற்றும் குறுகியகால கடன்கள்:**

1. அரசிடமிருந்து வட்டியில்லா கடன் ரூ.43.61 கோடி

உச்சநீதிமன்ற உத்தரவைப் பின்பற்றி, 05.01.2018ல் வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்ட அறிவிக்கை எண்.3.50/2017ன்படி, டான்செமின் கள்ளன்குறிச்சி சுரங்கத்துக்கு சுற்றுச்சூழல் அனுமதியைப் பெற ரூ.43.61 கோடியை (தமிழ்நாடு அரசின் புவியியல் மற்றும் சுரங்கத் துறை மதிப்பீட்டின்படி) அபராதமாக செலுத்த வேண்டியிருந்தது. கள்ளன்குறிச்சி சுரங்கத்துக்கு சுற்றுச்சூழல் அனுமதியைப் பெறாமல் இருந்ததற்காக அபராதத்தை செலுத்துவதற்காக 21.06.2018ல் அரசாணை

எண்.64ன்படி வட்டியில்லா கடனை அரசு வழங்கியது.

மார்ச் 31, 2023ன்படி கடனில் ரூ.6.54 கோடியை டான்செம் திருப்பி அளித்தது. 2022–23ஆம் நிதிண்டில் இரண்டாவது அரையாண்டு காலத்துக்கான ரூ.2.18 கோடி தொகை 25.5.2023ல் செலுத்தப் பட்டது.

**2. அரசிடமிருந்து வட்டியில்லா கடன் ரூ.73.90 கோடி**

அரியலூர் சிமெண்ட் ஆலையின் உற்பத்தித் திறனை ஆண்டுக்கு 5 லட்சம் மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து 15 லட்சம் மெட்ரிக் டன் என்ற அளவுக்கு விரிவாக்கம் செய்ய 21.04.2017 தேதியிட்ட அரசாணை எண்.47ன்கீழ் அரசு ஒப்புதல் அளித்தது. இதற்கான செலவு ரூ.750 கோடி (110 கிலோவாட் துணை நிலையமும் அடங்கும்). இதில், உரிமையாளரின் பங்கான ரூ.147.80 கோடியில் பங்கு முதலீடாக ரூ.73.90 கோடியையும், வட்டியில்லா கடனாக ரூ.73.90 கோடியையும் தமிழ்நாடு அரசு வழங்கியது. மீதமுள்ள தொகை வங்கிகளிடமிருந்து குறிப்பிட்ட கால கடனாக பெறப்பட்டது.

மேற்கண்ட தொகையை செலுத்துவதற்கான நிபந்தனைகள் கீழ்வருமாறு:

அ) பணத்தை திருப்பிச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகள்

ஆ) பணத்தை திருப்பிச் செலுத்தாமல் இருக்க சலுகை அளிக்கப்பட்ட காலம் 24 மாத கால கட்டுமானப் பணிகள் முடிவடைந்தபிறகு 5 ஆண்டுகள் வரை

இ) பணத்தை திருப்பிச் செலுத்துவதற்கான நாள் தொடங்குவது 24 மாத கட்டுமான காலம் முடிவடைந்த பிறகு, 5 ஆண்டுகள் முடிவில்.

**3. அரசிடமிருந்து கிடைக்கும் தொகை ரூ.20 கோடி**

1996ம் ஆண்டில் 320.76 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியபிறகு,, அரியலூர் சார் நீதிமன்றத்தில் நிலம் கையகப்படுத்துதலுக்கு எதிராக 390 வழக்குகள் தொடரப்பட்டன. இதனை விசாரித்த நீதிமன்றம், 29.11.2012 ல் பிறப்பித்த உத்தரவில், சென்ட்டுக்கு இழப்பீட்டுத் தொகையை ரூ.1,250ஆக அதிகரித்து வழங்க அனுமதி அளித்து வழக்கை முடித்துவைத்தது. டான்செம் நிறுவனம் தாக்கல் செய்த ரிட் மனுக்களை விசாரித்த நீதிமன்றம், வழக்குகளை மீண்டும் விசாரித்தது. இதனைத் தொடர்ந்து 16.02.2017ல் பிறப்பித்த உத்தரவில், இழப்பீட்டுத் தொகையை ரூ.1,200ஆக மாற்றியமைத்து உத்தரவிட்டது. இதன்மூலம், நிறுவனம் செலுத்த வேண்டிய தொகை ரூ.20 கோடி. நீதிமன்றம் நிர்ணயித்த இழப்பீட்டுத் தொகையை வழங்க ரூ.20 கோடியை கடனாக வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசிடம் டான்செம் நிறுவனம் கோரிக்கை விடுத்தது. 13.08.2019ல் தொழில் துறை வெளியிட்ட அரசாணை எண்.155ன்படி, ரூ.20 கோடியை ஆண்டுக்கு 12.60% வட்டி மற்றும் ஆண்டுக்கு 2.5% அபராத வட்டியை காலாண்டு அடிப்படையில் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்க அரசு உத்தரவிட்டது. ரூ.20 கோடி கடனும் 2021-22ம் ஆண்டில் திருப்பிச் செலுத்தப்பட்டது. இந்த கடன் மீதான வட்டி மற்றும் அபராத வட்டியை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசிடம் டான்செம் நிறுவனம் கோரிக்கை விடுத்தது. எனினும், கடனை திருப்பிச் செலுத்தும் வரை, வட்டி மற்றும் அபராத வட்டிக்காக ரூ.573.73 லட்சத்துக்கான வழிமுறையை நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.

**4. பாரத ஸ்டேட் வங்கியிடம் குறிப்பிட்ட கால கடன்:**

டான்செம் நிறுவனத்துக்கு ரூ.602.20 கோடி அளவுக்கு குறிப்பிட்ட காலக் கடனை பாரத ஸ்டேட் வங்கி வழங்கியது. கொரோனா பெருந்தொற்று பரவல் காரணமாக, ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின்படி, 6 மாத காலத்துக்கு அதாவது மார்ச் 20 முதல் ஆகஸ்ட் 20 வரை ரூ.24.31 கோடி கடனை கட்ட அவகாசம் வழங்கப்பட்டது. இதன் காரணமாக, மார்ச் 31, 2021ன்படி, பாரத ஸ்டேட் வங்கி வழங்கிய ஒட்டுமொத்த கடன் அளவு ரூ.626.51 கோடியாக உயர்ந்துள்ளது. மார்ச் 31, 2023 வரையான காலத்தில் டான்செம் நிறுவனம் ரூ.626.51 கோடி கடனில் ரூ.188.12 கோடி கடன் தொகையை திருப்பிச் செலுத்தியது. மார்ச் 31, 2023 நிலவரப்படி, பாரத ஸ்டேட் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.438.39 கோடியாக இருந்தது.

**5. தொடக்க நிலுவை நீக்குதல் மற்றும் திரும்ப சேர்த்தல்**

டான்செம் நிறுவனம், கணக்குப்பதிவுக்கு 2011–12 வரை ஆரக்கிள் மென்பொருளை பயன் படுத்திவந்தது. ஏப்ரல் 1, 2012 முதல் ஈஆர்பி ஆரக்கிள் அடிப்படையிலான மென்பொருளை அமல் படுத்தியது. ஆரக்கிளிலிருந்து ஈஆர்பிக்கு தரவுகள் மாற்றம் செய்யப்பட்டன. 2012 முதல் வர வேண்டிய சில நிலுவைத் தொகைகள், இதுவரை பெறப்படாமல் டான்செமின் கணக்குப்பதிவுப் புத்தகத்தில் பொறுப் பாகவே உள்ளன. நீண்டகாலமாகவே வர வேண்டிய தொகை நிலுவையிலேயே உள்ளன. மற்றும் இதுகுறித்த தரவுகள் இல்லை அல்லது விநியோகஸ்தர்கள் கோரவில்லை. எனவே, இதனை நீக்கிவிட்டு, சொத்துக்கள் மற்றும் பொறுப்பில் திரும்ப எழுதிவிட முடிவுசெய்தது. இதன் காரணமாக, ரூ.480.28 லட்சம் நிலுவைத் தொகையை நீக்கிவிடவும், ரூ.710.96 லட்சம் தொகையை சொத்துக்கள் மற்றும் பொறுப்பில் திரும்ப எழுதிவிடவும் திட்டமிட்டு, இதுகுறித்த ஒப்புதலுக்கு ஜூலை 26, 2023 ல் நடைபெற்ற இயக்குநர்கள் வாரியத்தின் 311ஆவது கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. இதற்கு வாரியம் ஒப்புதல் அளித்தது. இதுகுறித்த பதிவுகள் 2022–23ம் நிதியாண்டுக்கான டான்செமின் கணக்குப்பதிவு புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

**6. நிலம் விற்பனை பொள்ளாட்சி வட்டம், கோவை மாவட்டம்**

ஆலங்குளம் ஆலையில் சிமென்ட் உற்பத்திக்கு தேவையான ஜிப்சத்தை தோண்டியெடுக்க கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தில் உள்ள கூலநாயக்கன்பட்டி கிராமத்தில் 89.87 ஏக்கர் அளவுக்கான நிலத்தை டான்செம் நிறுவனம் வாங்கியது. ஆனால், நிலத்திற்கான செலவு அதிகமாக இருந்ததாலும், கிடைக்கும் ஜிப்சம் தரமாக இல்லாததாலும், இந்தத் திட்டம் கைவிடப்பட்டது. எனவே, டான்செம் நிறுவனத்தால் பயன்படுத்தப்படாமல் இருந்த நிலத்தை சிப்காட் நிறுவனத்துக்கு வழங்கும் திட்டத்துக்கு ஒப்புதல் கோரி, மே 30, 2019ல் நடைபெற்ற டான்செம் இயக்குநர்கள் வாரியத்தின் 290வது கூட்டத்தில் பரிந்துரை முன் வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்துக்கு இயக்குநர்கள் வாரியம் ஒப்புதல் அளித்தது. 89.87 ஏக்கர் நிலத்தை ரூ.10.33 கோடிக்கு வாங்கிக் கொள்ள சிப்காட் முன்வந்தது. இந்தத் தொகையை டிசம்பர் 2022ல் வழங்கியது.

**7. ஆலங்குளம் ஆலையில் சூளை அகற்றம்**

ஆலங்குளம் ஆலையில் இருந்த சூளையில் மார்ச் 2017ல் ஏற்பட்ட பழுது காரணமாக, கிளிங்கர் உற்பத்தி நிறுத்தப்பட்டது. இந்த விவகாரத்தில் சூளையை அகற்றுவதற்கு அனுமதி அளிக்குமாறு ஜூலை 26, 2023ல் நடைபெற்ற 311வது வாரியக் கூட்டத்தில் டான்செம் நிறுவனம் கோரிக்கை வைத்தது. இதற்கு ஒப்புதல் அளித்த இயக்குநர்கள் வாரியம், உரிய மதிப்பீட்டுக்குப் பிறகு எம்எஸ்டிசி அல்லது என்ஐசி மூலமாக சூளையை அகற்றுமாறு உத்தரவிட்டது. இதையடுத்து, வாரியத்தின் உத்தரவுப்படி, ஆலங்குளம் ஆலையிலிருந்தது சூளை அகற்றப்பட்டது. இதுகுறித்த மதிப்பீடு நிலுவையில் இருப்பதால், இதனால் ஏற்பட்ட நிதியின் தாக்கம் குறித்த விவரங்கள் அதற்கு அடுத்த ஆண்டில் முடிவுசெய்யப்படும்.

**8. கூடுதல் வாக்குறுதி சமூக பொறுப்புணர்வுப் பணிகளுக்கு உத்தரவாதம்**

அரியலூரில் புதிய ஆலையை டான்செம் நிறுவனம் தொடங்குவதற்காக செப்டம்பர் 8, 2017ல் வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகம் ஒப்புதல் அளித்து வெளியிட்ட ஆணை எண்.பி11011/83/2014மிகிமிமி(மி)வின்படி, ஆலையைத் தொடங்குவதற்கான ஒட்டுமொத்த செலவினமான ரூ.542 கோடியில் குறைந்தபட்சம் 2.5% தொகையை நிறுவன சமூக பொறுப்புணர்வுப் பணிகளுக்கு செலவிட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. இதனடிப்படையில், ஒட்டுமொத்த தொகையான ரூ.1,352 லட்சத்தில் 31.03.2023 வரை டான்செம் நிறுவனம் ரூ.1,309.27 லட்சத்தை செலவிட்டுள்ளது. மீதமுள்ள ரூ.42.73 லட்சம் தொகை வரும் ஆண்டுகளில் செலவிடப்படும்.

திட்டத்திற்கான செலவு ரூ.795.57 கோடியாக அதிகரித்துள்ளதால், டான்செம் நிறுவனம், அதிகரித்துள்ள திட்ட செலவுக்கு ஏற்ப சமூக பொறுப்புணர்வுப் பணிகளுக்கு கூடுதலான நிதியை செலவிட உள்ளது. நிறுவன சமூக பொறுப்புணர்வு நிதியை அதிகரிப்பதற்கு ஒப்புதல் அளிக்குமாறு ஜூலை 26, 2023ல் நடைபெற்ற நிறுவனத்தின் 311வது வாரியக் கூட்டத்தில் ஒப்புதல் கோரப்பட்டது. அரசின் விதிமுறைப்படி, ரூ.10 கோடிக்கும் மேலான திட்டங்களுக்கு திட்ட முதலீட்டு குழுவுக்கு அனுப்பிவைக்க வேண்டும். இந்த விவகாரத்தில், திருத்தியமைக்கப்பட்ட திட்ட செலவின் அடிப்படையில், அதிகரிக்கப்பட்ட சமூகப் பணிகளுக்கான நிதிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்குமாறு

திட்ட முதலீட்டுக் குழுவுக்கு டான்செம் நிறுவனம் கோரிக்கை விடுத்தது. இறுதி ஒப்புதல் கிடைத்தவுடன், சமூக பொறுப்புணர்வு பணிகளுக்கான கூடுதல் செலவினம் குறித்த தகவல்கள், டான்செமின் கணக்குப்பதிவு புத்தகங்களில் சேர்க்கப்படும்.

**9. நிலம் கையகப்படுத்துதல் வாலாஜாநகரம், அரியலூர் மாவட்டம்**

சுண்ணாம்புக்கல் எடுப்பதற்காக டான்செம் நிறுவனத்துக்கு நிலஒதுக்கீடு செய்யுமாறு அரசிடம் டான்செம் நிறுவனம் கோரிக்கைகளை அனுப்பியது. டான்செம் நிறுவனத்தின் கோரிக்கையின் அடிப்படையில், அரியலூர் வட்டத்தில் உள்ள கைருலாபாத், வாலாஜாநகரம், பெரியநல்லூர், அமீனாபாத், புதுப்பாளையம், ரெட்டிபாளையம் கிராமங்களில் தாதுக்கள் சலுகை விதிகள் 1960ன் உள்விதி 58ன் கீழ், அரசாணை எண். 921, சுண்ணாம்புக்கல் எடுப்பதற்காக 1,283.62 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்து தொழில் துறை (எம்2) 25.08.1986 தேதியிட்ட அறிவிக்கையை வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து, அரியலூர் வட்டத்தில் நிலத்தை கையகப்படுத்துவதற்காக டான்செம் நிறுவனத்துக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி 6.7.1994ல் அரசாணை எண்.179ஐ தொழில் துறை வெளியிட்டது.

எனினும், டான்செம் நிறுவனத்துக்கு ஆதரவாக நிலம் கையகப்படுத்துதல் பணிகளை நிலம் கையகப்படுத்துதல் அதிகாரி மேற்கொள்வதற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் தனியார் சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்களான டால்மியா சிமெண்ட்ஸ், அல்ட்ராடெக் சிமெண்ட்ஸ், ராம்கோ சிமெண்ட்ஸ் சார்பில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களில் பெரும்பாலானவற்றை சென்னை உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் தள்ளுபடி செய்தன.

தீர்ப்புக்கு முன்னதாக முடிவுகள் எடுக்கப்படாத 17 ரிட் மனுக்களில், 14 ரிட் மனுக்கள் தொடர்பாக புதிய சட்டம், அதாவது நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமை, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்துதல் சட்டம், 2013ன்கீழ், நிலத்துக்கான மதிப்பை அரியலூர் வருவாய் கோட்ட அதிகாரி நிர்ணயம் செய்தார். கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், அரியலூர் கோட்டாட்சியரிடம் ரூ.804.23 லட்சத்தை டான்செம் நிறுவனம் செலுத்தியது. வருவாய்த் துறை ஆவணங்களில் டான்செம் நிறுவனத்துக்கு ஆதரவாக பட்டா மாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**10. செயல்பாட்டில் இல்லாத ஆலைகள் எஸ்டபிள்யூபி மற்றும் டிஎன்ஏ ஷீட் பிரிவுகள்**

விருத்தாசலத்தில் உள்ள ஸ்டோன்வேர் பைப் ஆலை, கடந்த 2017ஆம் ஆண்டு மே மாதம் முதல் செயல்பாட்டில் இல்லை. களிமண் சுரங்கத்தில் சுரங்கப் பணிகளை மேற்கொள்வதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறவில்லை என்று கூறி, அதற்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை தடைவிதித்தது.

உற்பத்திச் செலவு அதிகரிப்பு மற்றும் ஃபைபரின் இறக்குமதி செலவு அதிகரிப்பு ஆகிய காரணங்களால், டிஎன்ஏ ஷீட் ஆலை, கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் முதல் செயல்படவில்லை. இந்த விவகாரத்தில் ஆலை செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராய ஆலோசனை நிறுவனத்தை நியமித்து டான்செட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதுகுறித்த அறிக்கை பெறப்பட்டதும், அந்த அறிக்கையின் அடிப்படையில், கணக்குப்பதிவு புத்தகத்தில் உரிய தகவல்கள் சேர்க்கப்படும்.

**11. TRAN1 கணக்கு தாக்கல் உள்ளீட்டு வரி வரவு**

முந்தைய வரி கட்டமைப்பிலிருந்து ஜிஎஸ்டி கட்டமைப்புக்கு ஒட்டுமொத்தமாக ரூ.12.87 கோடி வரவை டான்செம் நிறுவனம் கொண்டுவந்துள்ளது. இந்த குறிப்பிட்ட தொகையில் டான்செம் நிறுவனம் ரூ.9.04 கோடி வரவை பயன்படுத்திக் கொண்டது. மீதமுள்ள ரூ.3.83 கோடியை ஜிஎஸ்டி ஜிஸிகிழி1 கணக்கு தாக்கலுக்கான காலக்கெடுவுக்குள் டான்செம் நிறுவனத்தால் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. இதுகுறித்து, பிப்ரவரி 1, 2021ல் நடைபெற்ற 298வது வாரியக் கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டு, இந்த விவகாரம் தொடர்பாக கணக்குப்பதிவு புத்தகத்தில் சேர்க்க வழிவகை செய்யுமாறு உத்தரவிடப்பட்டது. இதனடிப்படையில், 2019–20ம் நிதியாண்டில் ரூ.3.83 கோடிக்கான வழிவகையை டான்செம் நிறுவனம் உருவாக்கியது.

ஜிஎஸ்டி TRAN-1 கணக்கு தாக்கலுக்கான கால அளவை அக்டோபர் 1, 2022 முதல் நவம்பர் 30, 2022 வரை கூடுதலாக அளித்து செப்டம்பர் 9, 2022ல் ஜிஎஸ்டி துறை சுற்றறிக்கை

எண்.180/12/2022GSTä வெளியிட்டது. இந்த சுற்றறிக்கையின் அடிப்படையில், திருத்தியமைக்கப்பட்ட ஜிஎஸ்டி TRAN-1 கணக்கை டான்செம் நிறுவனம் தாக்கல் செய்தது. ஜிஎஸ்டி TRAN-1 கணக்கை ஆய்வு செய்த பிறகு, ரூ.3.07 கோடியை வரவுவைத்துக் கொள்ள பிப்ரவரி 27, 2023ல் உத்தரவு எண்.12/2023ஐ ஜிஎஸ்டி துறை வெளியிட்டது. அதில், டான்செம் நிறுவனத்தில் மின்னணு வரவு கணக்குப் புத்தகத்தில் வரவு வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மீதமுள்ள மூலதன பொருளுக்கான ரூ.1.67 கோடியை திரும்பப் பெற முடியாது.

பயன்படுத்திக் கொள்ள முடியாத ரூ.1.67 கோடி தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுவை டான்செம் நிறுவனம் தாக்கல் செய்தது. மேலும், பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்ட ரூ.3.07 கோடி தொகை, டான்செம் நிறுவனத்தின் மின்னணு கணக்குப் புத்தகத்தில் வரவுவைக்கப் படவில்லை. இதுதொடர்பாக ஜிஎஸ்டி துறைக்கு டான்செம் நிறுவனம் கடிதம் எழுதியது.

**12. நிரந்தர சொத்துக்களில் எதிர்மறை இருப்பு**

ERP நிரந்தர சொத்து முறையின்கீழ், டான்செம் நிறுவனத்தின் நிரந்தர சொத்துக்கள் பராமரிக்கப்படுகின்றன. சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுள் அடிப்படையில், ஒவ்வொரு கணக்குப்பதிவு ஆண்டின் இறுதியிலும் தேய்மானத்தை மென்பொருளே கணக்கிட்டு வருகிறது. கடந்த காலங்களில், சொத்துக்களின் பயன்பாட்டு ஆயுள், ஆண்டின் மத்தியில் நிறைவடையும்போது, ஒட்டுமொத்த ஆண்டுக்குமான தேய்மானத்தை மென்பொருள் கணக்கிடும். இதன் காரணமாக, சில சொத்துக்கள் மீது எதிர்மறையான இருப்பு பதிவாகிறது. சொத்துக்களின் எதிர்மறை இருப்பை காட்டக் கூடாது என்ற அடிப்படையில், எதிர்மறை இருப்பு பிரச்சினையை சரிசெய்ய டான்செம் நடவடிக்கை எடுத்தது. இதன்படி, 2022–23ம் நிதியாண்டில் ரூ.3.14 லட்சம் தேய்மான மதிப்பை தொடக்க இருப்பிலேயே கொண்டுவந்து சரிசெய்தது.

**13. பங்காதாயம்**

மே 19, 2014ல் நிதித்துறை வெளியிட்ட அரசாணை எண்.123ன்படி, அரசு பொதுத்துறை நிறுவனங்கள் நிகர லாபத்தில் (வரிக்குப் பிறகு) 30% தொகையை அல்லது பங்கு மூலதனத்தில் 30%, இதில், எது அதிகமோ அதனை, கொடுப்பதற்கான வருவாய் இருப்பதைப் பொறுத்து, பங்காதாயமாக வழங்க வேண்டும் என்று பொதுவான பங்காதாய கொள்கையை மாநில அரசு கொண்டுவந்துள்ளது. டான்செம் நிறுவனம், நடப்பு நிதியாண்டில் ஒட்டுமொத்த இழப்பு சரிசெய்யப்பட்டுள்ளதால், நிறுவனத்தின் பங்குகளுக்கு 30% பங்காதாயம் வழங்க நிறுவனம் பரிந்துரைத்துள்ளது.

**14. எரிசக்தி தணிக்கை**

எம்/எஸ் என்ஐஎன் எரிசக்தி இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தை 2020ம் ஆண்டில் நியமித்து எரிசக்தி தணிக்கையை நிறுவனம் மேற்கொண்டது. மூன்று ஆண்டுகளுக்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையிலான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. வரும் காலத்துக்கான எரிசக்தி தணிக்கையைப் பொறுத்தவரை, டெண்டர் வெளியிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இந்தப் பணிகள் நிறைவடையும்.

**I. தொழிலாளர் நலனுக்காக கணக்குப்பதிவு :**

நடப்பு ஆண்டிற்கான பணிக்கொடை மற்றும் விடுப்பு பணப்பரிவர்த்தனை தொடர்பான ஒதுக்கீடு கணக்கு அறிக்கையின் படி கணக்குகளில் வழங்கப்பட்டுள்ளது மற்றும் விவரங்கள் கீழே உள்ளன.

| திட்டம் வகை | நிதி ஒதுக்கியது | நிதி ஒதுக்காதது |
|---|---|---|
| **வெளியீட்டுக் காலம்** | **பணிக்கொடை 01.04.2022 முதல் 31.03.2023** | **ஊழியர் விடுப்பை ரொக்கமாக்கும் பயன் திட்டம் 01.04.2022 முதல் 31.03.2023** |
| தொடக்க மற்றும் இறுதிநிலை இருப்பில் தற்போதைய மதிப்பீட்டு நிலையை மாற்றிக் கொள்வதில் (PVO) இணக்கம் | | |
| காலத்தின் தொடக்கத்தில் தற்போதைய மதிப்பீட்டு நிலை | 1327.43 | 712.66 |
| வட்டிச் செலவினம் | 92.93 | 44.42 |
| நடப்பு சேவைக்கான செலவு | 56.40 | |
| கடந்தகால சேவைக்கான செலவு (பணமாக திரும்பப் பெற முடியாத பலன்கள்) | – | – |
| கடந்த கால சேவைக்கான செலவு (பணமாக திரும்பப் பெறக் கூடியவை) | – | – |
| பலன்கள் வழங்கப்பட்டது | (321.70) | (159.72) |
| மதிப்பீட்டு இழப்பு/(வரவு) | 126.76 | 251.22 |
| காலத்தின் இறுதியில் தற்போதைய மதிப்பீட்டு நிலை | 1281.82 | 848.58 |
| வரவு செலவு கணக்கில் செலவுகளுக்கு அங்கீகாரம் | 01.04.22 முதல் 31.03.23 வரை பணிக்கொடை | 01.04.22 முதல் 31.03.23 வரையான காலத்தில் தொழிலாளர்கள் விடுப்பை பணமாக மாற்றிக் கொள்வது |
| நடப்பு சேவைக்கான செலவு | 56.40 | |
| வட்டிச் செலவு | 92.93 | 44.42 |
| திட்டமிடப்பட்ட சொத்துக்களில் எதிர்பார்க்கப்படும் லாபம் | 7.15 | |
| ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட நிகர மதிப்பீட்டு (ஆதாயம்)/ இழப்பு | 126.76 | 251.22 |
| தொடக்க நிலை நிகர பொறுப்பு | 1327.43 | 712.66 |
| மேற்குறிப்பிட்ட செலவுகள் | 268.94 | 295.64 |
| வழங்கப்பட்ட பலன்கள் | (321.70) | (159.72) |
| நிதிநிலை அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட இறுதிநிலை நிகர பொறுப்பு | 1088.48 | 712.66 |

| **முதன்மையான மதிப்பீட்டு அளவீடுகள் (சராசரி அளவில் குறிப்பிடப்படுபவை)** | **பணிக்கொடை ஊழியர்** | | **விடுப்பை ரொக்கமாக்கும் பயன் திட்டம்** | |
|---|---|---|---|---|
| | **01-04-2022 முதல் 31-03-2023** | **01-04-2021 முதல் 31-03-2022** | **01-04-2022 முதல் 31-03-2023** | **01-04-2021 முதல் 31-03-2022** |
| தள்ளுபடி விகிதம் | 7.25% | 7% | 7.18% | 7.02% |
| சம்பளம் அதிகரிக்கும் விகிதம் | 7% | 7% | 5% | 5% |
| தேய்வு விகிதம் | 1-3% | 1-3% | 1-3% | 1-3% |
| திட்டமிடப்பட்ட சொத்துக்களில் எதிர்பார்க்கப்படும் லாப விகிதம் | 7% | 7% | 0.00% | 0.00% |

மதிப்பீட்டு அளவு, பணவீக்கம், பணிமூப்பு, பதவிஉயர்வு மற்றும் பணி சந்தையில் ஆட்களின் தேவை மற்றும் இருப்பு போன்ற மற்ற காரணிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் அதிகரிக்க வாய்ப்பு உள்ள சம்பளம் மதிப்பிடப்பட்டுள்ளது..

**II) வருவாய் மீதான வரிவிதிப்பை கணக்குப்பதிவு செய்தல்**

31.03.2023ன்படி, நிறுவனத்தின் நேர்மறையான நிகர மதிப்பு ரூ.10,529.14 லட்சமாக இருந்தது. நிலையற்ற காலம் காரணமாக, முன்கூட்டியே செலுத்தப்பட்ட வரி சொத்தை இழப்பை முன்னோக்கி கொண்டுசெல்வதுடன் சரிசெய்யப்படும் என்பதால், முன்கூட்டியே செலுத்தப்பட்ட வரி சொத்து ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பயன்படுத்திக் கொள்ளப்படாத தேய்மானம் மீதான முன்கூட்டியே செலுத்தப்பட்ட வரி அளவானது, முன்கூட்டியே செலுத்தப்பட்ட வரி அளவைவிட அதிகமாக இருந்ததால், காலமாற்றத்தால் சேர்ந்தால் முன்கூட்டியே செலுத்தப்பட்ட வரி மற்றும் நடப்பு ஆண்டு தேய்மானம் அங்கீகரிக்கப்படவில்லை.

**III) நிறுவனத்திற்கு எதிரான தொடர்ச்சியான பொறுப்புகள் மற்றும் உரிமைகோரல்கள் கடன்களாக ஒப்புக்கொள்ளப்படவில்லை:**

**A) அ. நிறுவனத்திற்கு எதிரான உரிமைகோரல்கள் கடன்களாக ஒப்புக்கொள்ளப்படவில்லை:**

1. எல்எல்ஏ கட்டிடத்தின் 10,211 சதுர அடி கொண்ட இரண்டாவது தளத்தையும், தலா 237 சதுர அடி கொண்ட இரண்டு பழுதுபார்ப்பு மையங்களையும் பிப்ரவரி 2022 வரை மாதாந்திர வாடகை அடிப்படையில் நிறுவனம் பயன்படுத்திவந்தது. 2008ம் ஆண்டில் டான்செம் நிறுவனத்தின் அலுவலகப் பகுதியின் வாடகையை எல்எல்ஏ அதிகரித்தது. இந்த வாடகை உயர்வை டான்செம் நிறுவனம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறுபட்ட வாடகையான ரூ.5.28 கோடியானது, கணக்கில் சேர்க்கப்படவில்லை.

2. 1993–94ஆம் ஆண்டு முதல் ராஜஸ்தானின் பி.எச்.இ.டி., நிறுவனம் கோரிய ரூ.56.29 லட்சம் இழப்பீட்டை, நிறுவனம் ஏற்றுக் கொள்ளவில்லை.

3. விலை வீழ்ச்சிப் பிரிவை (வாடகை ஒப்பந்தம்) பயன்படுத்தி 1993–94ம் ஆண்டில் ரூ.12.69 லட்சத்தையும், 1994–95ம் ஆண்டில் ரூ.10.40 லட்சத்தையும் தமிழ்நாடு குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் நிறுத்தி வைத்தது.

   600 எம்எம்டிஐஏ பைப்களை மாற்றுவதற்கான செலவினம். இந்த நிறுத்திவைத்த தொகை, சர்ச்சைக் குள்ளாகியிருப்பதால், இதனை மீட்பது தொடர்பான நடவடிக்கைகள் எதுவும் கணக்குப்பதிவில் இல்லை.

4. டான்செம் நிறுவனத்துக்கு விநியோகம் செய்த பொருட்களுக்கான செலவு மற்றும் வட்டியுடன் ரூ.32.09 லட்சம் இழப்பீடு வழங்குமாறு ஈடல் காஸ்ட் இந்தியா நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளளது. ஆனால், பொருட்கள் விநியோகிக்கப்படவில்லை என்பது டான்செம் நிறுவனத்தின் கருத்தாக உள்ளது. இந்த விவகாரம் 1997–98 ஆம் ஆண்டு முதலே சமரச நடவடிக்கையில் உள்ளது.

5. சீனாவிலிருந்து 1990–91ம் ஆண்டு முதல் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியில் 1097.36 மெட்ரிக் டன் அளவுக்கு குறைவாக விநியோகிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்தத் தொகை ரூ.6.93 லட்சம்.

6) ரூ.30.06 லட்சத்தை டான்செம் நிறுவனம் செலுத்த வேண்டும் என்று தெற்கு ரயில்வே கோரியுள்ளது. இதில், அபராதக் கட்டணம் ரூ.28.56 லட்சம் (பிப்ரவரி 2003 முதல் நவம்பர் 2006 வரை), சரக்கை குறைவாக கணக்கிட்டது ரூ.0.97 லட்சம், 13.10.2009 வரை பழைய தாமதக் கட்டணம் ரூ.0.53 லட்சம் ஆகியவை அடங்கும். இந்தக் கோரிக்கையை டான்செம் நிறுவனம் ஏற்க மறுத்து வருகிறது.

7) டான்செம் நிறுவனம் தாமதமாக பணம் செலுத்தியதால், அதற்கான வட்டியாக ரூ.145 லட்சத்தை செலுத்த வேண்டும் என்று சிங்கரேனி காலீயரீஸ் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது. இதனை டான்செம் நிறுவனம் ஏற்க மறுத்துள்ளது.

**B) நிறுவனத்தின் மற்ற தொடர் பொறுப்புகள்**

**1) வருமானவரி மேல்முறையீட்டு நிலுவை:**

i) 1997–98, 1998–99, 2003–04, 2007–08 மற்றும் 2017–18ம் மதிப்பீட்டு ஆண்டுகளில் ரூ.1,376.86 லட்சம் அளவுக்கு பல்வேறு நிலைகளிலும் கோரப்பட்ட வருமானவரி தொடர்பான விவகாரங்களில் மேல் முறையீடு செய்யப்பட்டு அவை நிலுவையில் உள்ளன. சர்ச்சைக்குரிய வருமானவரி கோரிக்கை மற்றும் முன்கூட்டியே செலுத்திய வரி தொடர்பான விவரங்கள் (ரூபாயில்).

| வருட கணக்கு | சர்ச்சைக்குரிய வரி கோரிக்கை | வரி செலுத்தலுக்கான முன்தொகை | எங்கு மேல்முறையீடு நிலுவையில் உள்ளது |
|---|---|---|---|
| 1997–98 | 9,40,99,106 | 64,02,782 | உயர்நீதி மன்றம்/மிஜிகிஜி |
| 1998–99 | 3,41,20,652 | 3,41,20,652 | ITAT |
| 2003–04 | 5,27,797 | 5,27,797 | ITAT |
| 2007–08 | 25,48,686 | – | உயர்நீதி மன்றம் |
| 2008–09 | 36,99,260 | – | உயர்நீதி மன்றம் |
| 2017–18 | 26,90,403 | – | ITAT |
| **மொத்தம்** | **13,76,85,904** | **4,10,51,231** | – |

ii) வருமானவரி பிடித்தம் செய்யப்பட்ட ரூ.0.29 லட்சத்தை செலுத்துமாறு கோரிக்கை வந்துள்ளது. இதனை சரிசெய்வதற்கான கணக்கு தாக்கல் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. கணக்குகள் சரிசெய்யப் பட்டதும், இந்த விவகாரத்தில் செலுத்த வேண்டிய தொகை இருக்காது என்று எதிர்பார்க்கப்படுவதால், கணக்குப்புத்தகத்தில் இதுதொடர்பான விவரங்கள் சேர்க்கப்படவில்லை.

| வ. எண் | அலகின் பெயர் | பொறுப்பின் தொகை (ரூபாய் லட்சத்தில்) | | |
|---|---|---|---|---|
| | | நிதி ஆண்டு:2007–08 2021–2022 வரை | 2022–23 | மொத்தம் |
| 1 | கார்பரேட் அலுவலகம் | 0.04 | 0.00 | 0.04 |
| 2 | ஆலங்குளம் சிமெண்ட் யூனிட் | 0.05 | 0.06 | 0.11 |
| 3 | அரியலூர் சிமெண்ட் யூனிட் | 0.14 | 0.00 | 0.14 |
| 4 | ஆலங்குளம் ஷீட் யூனிட் | 0.00 | 0.00 | 0.00 |
| 5 | விருதாச்சலம் ஸ்டோன்வேர் பைப் யூனிட் | 0.00 | 0.00 | 0.00 |
| **மொத்தம்** | | **0.23** | **0.06** | **0.29** |

**2) நிலுவையில் உள்ள விற்பனை வரி மேல்முறையீடுகள்**

i) 1989–90, 1990–91 முதல் 1998–99 வரையான மதிப்பீட்டு ஆண்டுகளில் வருமானவரித் துறை தொடர்பான பல்வேறு நிலைகளிலும் மேல்முறையீடுகள் நிலுவையில் உள்ளன :

| சட்டம் | வருட கணக்கு | சர்ச்சைக்குரிய வரி கோரிக்கை | எங்கு மேல்முறையீடு நிலுவையில் உள்ளது |
|---|---|---|---|
| விற்பனை வரி சட்டம் | 1989–90 | 38.73 | துறையிடம் நிலுவையி உள்ளது |
| விற்பனை வரி சட்டம் | 1990–91 | 795.82 | துறையிடம் நிலுவையி உள்ளது |
| விற்பனை வரி சட்டம் | 1992–93 | 254.33 | துறையிடம் நிலுவையி உள்ளது |
| விற்பனை வரி சட்டம் | 1993–94 | 21.35 | மதிப்பீட்டு அதிகாரியால் மீண்டும் நீக்கம் செய்யப்பட்டது |
| விற்பனை வரி சட்டம் | 1993–94 | 6.91 | தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு நிலுவையில் உள்ளது |
| விற்பனை வரி சட்டம் | 1994–95 | 51.60 | மதிப்பீட்டு அதிகாரியால் மீண்டும் நீக்கம் செய்யப்பட்டது |
| விற்பனை வரி சட்டம் | 1995–96 | 0.80 | மதிப்பீட்டு அதிகாரியால் மீண்டும் நீக்கம் செய்யப்பட்டது |
| விற்பனை வரி சட்டம் | 1996–97 | 15.07 | விற்பனை வரி மேல்முறையீடுகள் |
| விற்பனை வரி சட்டம் | 1997–98 | 15.00 | விற்பனை வரி மேல்முறையீடுகள் |
| விற்பனை வரி சட்டம் | 1997–98 | 2.28 | விற்பனை வரி மேல்முறையீடுகள் |
| விற்பனை வரி சட்டம் | 1998–99 | 2.79 | விற்பனை வரி மேல்முறையீடுகள் |
| மத்திய கலால் சட்டம் (CENVAT கடன் உரிமை) | 2008–09 | 237.94 | மேல்முறையீட்டு தீர்ப்பாயம்(கள்) |
| விற்பனை வரி சட்டம் | 2001–02 | 321.17 | துறையிடம் நிலுவையில் உள்ளது |

வரி பொறுப்பு தொடர்பான எந்த நிகழ்வுக்கும் வழிமுறைகள் ஏற்படுத்தப்படவில்லை

ii) சிமெண்ட் விநியோகத்துக்காக டிஆர்டிஏ, நகராட்சிகள், பஞ்சாயத்து ஒன்றியங்கள், டவுன் பஞ்சாயத்துகள் ஆகியவற்றிடமிருந்து பல்வேறு நிலைகளிலும் கோரிய விற்பனை வரியான ரூ.9,78,770 கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அமைப்புகளிடமிருந்து தொகை கிடைத்ததும், அது கணக்கில் சரிசெய்யப்படும்.

iii) டான்செம் நிறுவனத்தில் தொடக்க ஆண்டுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக, நவம்பர் 1999 முதல் நவம்பர் 2002 வரை வணிகவரித் துறைக்கு ரூ.88.47 கோடியை செலுத்த முடியவில்லை. பின்னர், 2007–08 முதல் விற்பனை வரியை டான்செம் நிறுவனம் செலுத்தத் தொடங்கியது. ரூ.88.47 கோடியையும் செலுத்தி முடிக்கும் பணிகள் 12.09.2014ல் நிறைவடைந்தன. வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 24.9.2010 தேதியிட்ட அரசாணை எண்.162 மூலம், 31.03.2010 வரையான காலத்தில் ரூ.173.78 கோடி அளவுக்கான வரி தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும், 1.4.2010 முதலான அபராத வட்டித் தொகையான ரூ.29.13 கோடியை தள்ளுபடி செய்யுமாறு அரசிடம் டான்செம் நிறுவனம் கோரிக்கை விடுத்தது. இந்தக் கோரிக்கை, அரசின் பரிசீலனையில் உள்ளது. இதன் காரணமாக, இதுகுறித்த விவரங்கள் கணக்குப் புத்தகத்தில் இடம்பெறவில்லை.

iv) அம்மா சிமெண்ட் விநியோகத் திட்டத்தின் தொடக்க காலத்தில், விநியோகஸ்தர்களிடமிருந்தது ரசீதுகளும், கிடங்குகளிலிருந்து விற்பனை விவரங்களும் கிடைக்கப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. எனவே, குறிப்பிட்ட காலத்துக்குள் கணக்குகளை டான்செம் நிறுவனத்தால் தாக்கல் செய்து, உள்ளீட்டு வரி வரவை கோர முடியவில்லை. டான்சம் நிறுவனம் தற்காலிகமாக 3 மாதங்களுக்கு (ஜனவரி முதல் மார்ச் 2015 வரை) ரூ.28,00,000 அளவுக்கு தமிழ்நாடு மதிப்பு கூடுதல் வரியை செலுத்தியது. 2015ம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையான காலத்துக்கான பரிவர்த்தனைகள் டிசம்பர் 2015 மற்றும் ஜனவரி 2016ல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டன. இதன் காரணமாக உள்ளீட்டு வரி வருவாயை பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. உள்ளீட்டு மதிப்பு கூடுதல் வரி வரவை பயன்படுத்திக்கொள்ள சிறப்பு அனுமதி அளிக்குமாறு அரசிடம் டான்செம் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது. மேலும், 2014–15ம் ஆண்டுக்கான கணக்கைத் தாக்கல் செய்யவும், 2015–16ம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட கணக்கை தாக்கல் செய்யவும் அனுமதிக்குமாறு சென்னையில் உள்ள மிகப்பெரும் வரி செலுத்துவோர் பிரிவில் உள்ள வணிக வரித் துறை துணை ஆணையரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் முடிவுக்காக காத்திருக்கிறோம்.

v) கலால் வரித் துறையுடன் பிரச்சினைக்குள்ளாகியிருந்த ரூ.406.50 லட்சம் அளவுக்கு சென்வாட் வரவை பயன்படுத்திக் கொண்டதால் எதிர்ப்பு எழுந்துள்ளது. 2008–09ம் ஆண்டு முதலே இதற்கான வழிவகை இல்லாததால், இதுகுறித்து மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் 2018–19 வரையில் நிலுவையில் உள்ளது. 2019 –20ம் ஆண்டில் சப்கா விஸ்வாஸ் (சட்ட பிரச்சினை தீர்வு) திட்ட விதிகள் 2019ஐ பயன்படுத்தினோம். இதன்மூலம், ரூ.168.56 லட்சம் வரித் தேவைக்கான நிவாரணம் கிடைத்தது. மீதமுள்ள ரூ.237.94 லட்சம் தொகையானது இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளது.

vi) மாவட்ட ஊரக மேம்பாட்டு அமைப்புகளுக்குத் தேவையான கூடுதல் சிமெண்ட்டை தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடமிருந்து ஒரு மூட்டைக்கு ரூ.2 என்ற அடிப்படையில் லாபம் வைத்துக் கொண்டு கொள்முதல் செய்ய டான்செம் நிறுவனத்துக்கு 6.6.2007 தேதியிட்ட அரசாணை எண்(2டி) 33படி அரசு உத்தரவிட்டது. இதில் கிடைத்த லாபத் தொகை, பிற வருவாய் என்ற அடிப்படையில் 2007–08ம் ஆண்டுமுதலே கணக்குப்பதிவு புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இதனை வர்த்தக நடவடிக்கையாக கருத 2014–15ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டது. இதன் காரணமாக, இதற்காக மாநில அரசுக்கு மதிப்பு கூடுதல் வரியை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. 2007–08 முதல் 2014–15 வரையான காலத்தில் மதிப்பு கூடுதல் வரி ரூ.226.74 லட்சமும், 2015–16ம் ஆண்டில் ரூ.37.14 லட்சமும் கணக்குப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 2016–17ம் ஆண்டில் மதிப்பு கூடுதல் வரி தொடர்பான கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த ஆண்டுக்கான மதிப்பு கூடுதல் வரியை அரசுக்கு செலுத்தியது.

2007–08 நிதியாண்டு முதல் 2015–16 வரையான காலத்தில் கொள்முதல் மீதான உள்ளீட்டு வரியைப் பெற அனுமதிக்குமாறும், கோரிக்கை விடுப்பதற்கான காலவரம்பை நீக்குமாறும் அரசு மற்றும் வணிக வரித் துறைக்கு டான்செம் கோரிக்கை விடுத்தது. இதுகுறித்த முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

இதனிடையே, சிமெண்ட்டுக்கு மூட்டைக்கு 2 ரூபாய் லாபம் வைத்ததை வணிக சேவைகளாக கருதியது தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு சென்னையில் உள்ள சேவை வரி ஆணையரகம் நோட்டீஸ் அனுப்பியது. இந்த விவகாரத்தில் ஏப்ரல் 2012 முதல் மார்ச் 2015 வரையான காலத்துக்கு வட்டி மற்றும் அபராதம் உள்ளிட்ட ரூ.3,21,16,830 கோரி, உத்தரவு எண்.100/2018 (சிடிஏ1), மற்றும் ஏப்ரல் 2015 முதல் மார்ச் 2017 வரை ரூ.50,11,253 கோரி 20.2.2019ல் உத்தரவு எண். 72/2019 (சிடிஏ1) ஆகியவற்றை டான்செம் நிறுவனத்துக்கு வெளியிடப்பட்டது. இந்த உத்தரவுகளை எதிர்த்து ஜிஎஸ்டி மற்றும் மத்திய கலால் ஆணையரிடம் டான்செம் நிறுவனம் மேல்முறையீடு செய்தது.

இந்தப் பணிகளை வர்த்தகமாக டான்செம் நிறுவனம் கருதியதால், இதுதொடர்பான பரிவர்த்தனைகள் தமிழ்நாடு மதிப்பு கூடுதல் வரியின் கீழ் வந்தன. எனவே, இதுதொடர்பான பொறுப்புகள் கணக்குப்பதிவு புத்தகத்தில் இடம்பெறவில்லை.

**3. நிலுவையில் உள்ள சட்ட வழக்குகள்:**

அ. நிலம் கையகப்படுத்துதலுக்கு எதிராக முன்னாள் நில உரிமையாளர்கள் சார்பில் 390 வழக்குகள் தொடரப்பட்டன. இதில், 339 வழக்குகளை அரியலூர் சார் நீதிமன்றம் முடித்து வைத்தது. 292 வழக்குகளில் ஒரு சென்ட் நிலத்துக்கான தொகையை ரூ.1,200லிருந்து ரூ.900ஆகக் குறைத்து, அதனை வட்டியுடன் செலுத்த சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த விவகாரத்தில், தீர்ப்பு நகல் கிடைக்கப் பெற்ற 178 வழக்குகளுக்காக ரூ.729.93 லட்சத்தை டான்செம் நிறுவனம் வைப்புத் தொகையாக செலுத்தியது. அதேநேரத்தில், மேலும் 114 வழக்குகள் தொடர்பான தீர்ப்பு நகல்களை டான்செம் நிறுவனம் அண்மையில் பெற்றுள்ளது. இதுதொடர்பாக அரியலூர் சார் நீதிமன்றத்தில் ரூ.258.71 லட்சத்தை வைப்புத் தொகையாக செலுத்துவதற்கான நடவடிக்கைகளை டான்செம் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. மீதமுள்ள 47 வழக்குகளில் தீர்ப்பு நகல் கிடைக்கப் பெற்றவுடன், மீதமுள்ள இழப்பீட்டுத் தொகையை நீதிமன்றத்தில் டான்செம் நிறுவனம் செலுத்தும். அரியலூர் சார் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள மீதமுள்ள 51 வழக்குகளைப் பொறுத்தவரை, சென்னை உயர்நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்பின் அடிப்படையில் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதும் பணத்தை டான்செம் நிறுவனம் செலுத்தும்.

ஆ. சென்னை உயர்நீதிமன்றத்தில் செலுத்தப்பட்ட ரூ.13.23 லட்சத்தில் முன்னாள் நில உரிமையாளர்கள் ரூ.12.39,024ஐ திரும்பப் பெற்றுள்ளனர். மீதமுள்ள வைப்புத் தொகையைப் பொறுத்தவரை, திரும்பப் பெறப்பட்டுள்ள விவரங்களை சிவகாசி கோட்டாட்சியரிடம் கோரியுள்ளோம்.

இ. நீதிமன்றங்கள் மற்றும் அரசிடம் நிலுவையில் உள்ள வழக்குகளில் நில உரிமையாளர்கள் அதிகரித்து வழங்குமாறு கோரிக்கை விடுத்த இழப்பீடு தொகைகளின் அளவு மதிப்பீடு செய்யப்படவில்லை. ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்காக நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை ரூ.2.61 கோடியாக அதிகரித்து ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் நெல்லை சார் நீதிமன்றங்கள் உத்தரவிட்டன. இதுதொடர்பான மேல்முறையீட்டை முடித்துவைத்த சென்னை உயர்நீதிமன்றம், இழப்பீட்டுத் தொகையை ரூ.70.27 லட்சமாக குறைத்தது. இந்தத் தொகையில் ரூ.12.38 லட்சம் அளவுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.57.89 லட்சம் தொகையானது, உயர்நீதிமன்றத்தின் இறுதி உத்தரவுக்காக காத்திருக்கிறோம். இந்த விவகாரத்தில், உயர் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்ட ரூ.13.23 லட்சம் தொகை 1994–95 முதலே உள்ளது.

ஈ. டான்செம் நிறுவனம் செலுத்த வேண்டிய நிலையில், நிறுத்திவைத்த ரூ.39.66 லட்சம் கோரி, சிறு, குறு நிறுவனங்கள் வசதி கவுன்சிலிடம் கோவையைச் சேர்ந்த யூனிகான் என்ஜினியர்ஸ் நிறுவனம் முறையிட்டது. கூடுதல் செலவினம் ஏற்பட்டதால் வட்டியுடன் கூடுதலாக ரூ.1,57,59,537 செலுத்த வேண்டும் என்று அந்த நிறுவனம் கோரிக்கை விடுத்தது. இதுதொடர்பாக வட்டியுடன் ரூ.1,97,25,681 இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், 2016ம் ஆண்டில் மற்றொரு விவகாரத்தில் ரூ.6,97,986 வழங்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. ரூ.5.88 கோடி தொகைக்காக உயர்நீதிமன்றத்தில் 2017ம் ஆண்டில் ஈ.பி. எண்.7ஐ உயர்நீதிமன்றத்திலும், வட்டியுடன் ரூ.13.69 லட்சம் கோரி நகர சிவில் நீதிமன்றத்தில் 2017ம் ஆண்டில் ஈ.பி. எண்.242ஐயும் நிர்வாக மனுக்களாக யுனிகான் நிறுவனம் தாக்கல் செய்தது. நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, ஒட்டுமொத்த தொகையான ரூ.4.41 கோடியில் 75 சதவீதத்தையும், ரூ.10.26 லட்சத்தையும் 2019–20 நிதியாண்டில் டான்செம் நிறுவனம் செலுத்தியது. மேலும், உயர்நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்தது. நீதிமன்றத்தின் உத்தரவுப்படி, முன்கூட்டிய வைப்புத் தொகையில் ரூ.1.50 கோடியை அந்த நிறுவனம் பெற்றுக் கொண்டது. டான்செம் நிறுவனம் தாக்கல் செய்த ஓபிக்களை 9.9.2021ல் சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. 2017ல் தாக்கல் செய்யப்பட்ட ஈ.பி., 7 வழக்குக்கு எதிராக 2022ல் டபிள்யூபி எண்.7633 ரிட் மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில், அது தள்ளுபடி செய்யப்பட்டது. 2017ல் தாக்கல் செய்யப்பட்ட ஈ.பி. எண்.242 தொடர்பாக தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக 2022ல் ரிட் மனு எண்.20580ஐ டான்செம் நிறுவனம் தாக்கல் செய்தது. இதனை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. எனவே, உச்சநீதிமன்றத்தில் டான்செம் நிறுவனம் மேல்முறையீடு செய்து, தடை ஆணையைப் பெற்றது. உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் இருப்பதால், செலுத்த வேண்டிய வட்டியில் மூன்றில் ஒரு பங்கான ரூ.338.21 லட்சத்தை நிதியாண்டு முடியும் வரை தயார்நிலையில் வைத்துள்ளது.

2021–22ஆம் ஆண்டு மற்றும் 2022–23ம் நிதியாண்டுக்கு ரூ.85.71 லட்சத்துக்கு ஒட்டுமொத்த வட்டித் தொகை அளவுக்கான தொகையை தயார் நிலையில் வைத்திருந்தது.

V) சுரங்கங்கள் காலியாகும்போது, மறுகட்டமைப்பு மற்றும் மறுவாழ்வுக்காக தேவைப்படும் செலவுத் தொகை மதிப்பீடு அடிப்படையில் சுரங்கப் பணிகளுக்கான குவாரிகளைப் பெறுவதற்கான செலவினத்தை நிறுவனம் வழங்கியுள்ளது. 2022–23ம் நிதியாண்டில் சுரங்க மீட்டெடுப்பு செலவினமாக ரூ.161.45 லட்சத்தை நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

VI) ஆண்டுக்கு 12% வட்டி என்ற அடிப்படையில், வணிக முன்பணமாக டான்செம் நிறுவனம் ஒப்புதல் அளித்த குறுகியகால கடன்கள் மற்றும் முன்பணம் என்ற அடிப்படையில் ரூ.2.63 கோடி தொகையை தமிழ்நாடு வெடிபொருட்கள் நிறுவனம் (டெல்) மார்ச் 31, 2021ல் வழங்க வேண்டியிருந்தது. 2021–22 நிதியாண்டில் ஒட்டுமொத்த கடன் தொகையான ரூ.2.63 கோடியை டெல் நிறுவனம் செலுத்தியது. டெல் நிறுவனம் அளித்த கடன் குறிப்புகளின் அடிப்படையில், 2015–16, 2016–17 நிதியாண்டுகளில் வட்டித் தொகையான ரூ.66.84 லட்சம் கணக்கில் சேர்க்கப்பட்டது. இந்தத் தொகையை டான்செம் நிறுவனம் இதுவரை பெறவில்லை. 2017–18 முதல் 2021–22 வரையான நிதியாண்டுகளில் வட்டி தொடர்பான கடன் குறிப்புகள், தமிழ்நாடு வெடி பொருள் நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை. இந்த ஆண்டுகளில் வட்டித் தொகை ரூ.2.28 கோடியாக அதிகரித்துள்ளது. இது டான்செம் நிறுவனத்தின் கணக்குப்பதிவு புத்தகத்தில் சேர்க்கப்படவில்லை. முன்பணம் மீதான வட்டியை தள்ளுபடி செய்யுமாறு டெல் நிறுவனம் கோரிக்கை விடுத்தது. இதனை டான்செம் நிர்வாகம் ஏற்றுக் கொள்ளவில்லை. முன்பணத்துக்கான வட்டித் தொகையான ரூ.2.94 கோடியை செலுத்துமாறு டெல் நிறுவனத்துக்கு ஜூன் 14, 2022, நவம்பர் 16, 2022, மார்ச் 28, 2023 ஆகிய தேதிகளில் டான்செம் நிறுவனம் கடிதம் எழுதியது.

VII) அரியலூர் ஆலையில் இருப்பு அறிக்கையை (இடுபொருட்கள் மற்றும் கருவிகள், உபகரணங்கள்) உபகரணங்கள் துறை பராமரித்து வருகிறது. 31.3.2017ன்படி, இருப்பு சரக்குகளில் கணக்குப் புத்தகத்தில் ரூ.52,01,781 அளவுக்கு வேறுபாடு இருந்தது. 2012–13ம் ஆண்டிலிருந்து சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் 2018–19ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. இதன்மூலம், வேறுபாடு அளவு ரூ.38,48,623ஆக குறைந்தது. இந்த மாறுபாட்டுத் தொகை பரிசீலனையில் உள்ளது. வரும் ஆண்டுகளில் இந்த வேறுபாடுகளை சரிசெய்வதற்காக அரியலூர் ஆலையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

